Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 25 வெள்ளிக்கிழமை (11.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 350

### தமிழ்ச்செல்வன் - கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பின் முடிவு

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறை காட்டத்தேவையில்லை

## சம்பந்தன் தகவல் தெரிவிப்பு

கிளிநொச்சி,நவம்பர்11


**ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்கள் அக்கறை காட்டவேண்டியதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அறிவித்துள்ளார்.**

**கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்த பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இரா.சம்பந்தன் இதை அறிவித்தார்.**

ஊடகவியலாளர்களிடம் இரா.சம்பந்தன் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான கூட்டம் நேற்று முற்பகல் 11 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 3 மணிக்கு நிறைவ

(16 ஆம் பக்கம் பார்க்க)



செய்தியாளர் சந்திப்பில் சம்பந்தன் எம்.பி. உரையாற்றுகிறார். அருகில் எம்.பிக்களான மாவை.சேனாதிராசா, ஜோசப் பரராஜசிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் உள்ளனர்.

## கத்திக்குத்துக்கு சிகிச்சை பெறவந்தவர் மதிலேறி படைமுகாமிற்குள் பாய்ந்தார்!

### யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றிரவு பரபரப்பு

யாழ்ப்பாணம்,நவ.11

கையில் ஏற்பட்ட கத்திக்குத்திற்கு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றவர் அங்கிருந்து தப்பிச்செல்வதற்காக ஆஸ்பத்திரியின் பின்புறமாகச் சென்று மதிலேறி படைமுகாமிற்குள் பாய்ந்தார்.

இச்சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றது. இதனால், ஆஸ்பத்திரிப் பகுதியில் திடீரென பரபரப்பு ஏற்பட்டது.

சாவகச்சேரிப் பகுதியில் நேற்றிரவு நண்பர்களுடன் சேர்ந்து நின்ற குறிப்பிட்ட நபர் திடீரென தனக்குத்தானே கத்தியால் கையில் குத்திக்கொண்டார் என்றும்-

இதனால், கையில் பலத்த காயமடைந்த இவர் யாழ். ஆஸ்பத் (16 ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்டத்தில் முதல் தடவையாக இன்று மாணவர் எழுச்சிமாநாடு

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் முதன்முறையாக ஏற்பாடு செய்துள்ள மாணவர் எழுச்சி மாநாடு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழீழ தேசியக் கொடியேற்றல், பொதுச் சுடல் ஏற்றல், அகவணக்கம் என்பவற்றைத் தொடர்ந்து எழுச்சி மாநாடு ஆரம்பமாகும்.

இதில் துணைவேந்தர் பேராசியர் சு.மோகனதாஸ், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், யாழ். கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொள்வர்.

முதன் முறையாக ஏற்பாடு செய்யப்பட்டி

(16 ஆம் பக்கம் பார்க்க)

### அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச வாக்காளர்களுக்கு

## நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய வாக்களிப்புக்கு ஏற்பாடுகள்

கொழும்பு,நவ.11

ஜனாதிபதித் தேர்தலில் அரச கட்டுப்பாடற்ற பகுதி வாக்காளர்கள், அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து வாக்களிப்பது தொடர்பில் உயர்நீதிமன்றம் விடுத்த உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்காக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தேர்தல் ஆணையாளர் நேற்று பணிப்புரை விடுத்திருக்கிறார்.

நாட்டில் அனைத்து மாவட்டங்களின் அரச அதிபர்கள், தெரிவத்தாட்சி அதிகாரிகள், உதவித் தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோரை நேற்றுத் தேர்தல் செயலகத்தில் சந்தித்துப் பேசியபோது வடக்கு-கிழக்கைச் சேர்ந்த அரச அதிபர்களுக்கு தேர்தல் ஆணையாளர் மேற்படி பணிப்புரையை விடுத்தார்.

எல்லைக் கோட்டிலிருந்து உட்புறமாக

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சுரேஷ் எம்.பியின் வீட்டை இலக்குவைத்து கட்டப்பிராயில் நேற்று கிரனேட் வீச்சு

### *வெற்றுக் காணியில் வெடித்ததால் சேதம் எதுவுமில்லை*

யாழ்ப்பாணம்,நவ.11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் வீட்டினை இலக்குவைத்து நேற்றுஅதிகாலை இரண்டு கிரனேட்டுக்கள் வீசப்பட்டுள்ளன.

பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு- கட்டப்பிராய் பகுதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்குச் சொந்தமான வீட்டினை நோக்கியே அடுத்தடுத்து இரண்டு கிரனேட்டுக்கள் வீசப்பட்டன என்றும்-

அவை இரண்டும் வீட்டிற்கு அருகிலுள்ள வெற்றுக்காணி ஒன்றினுள் வீழ்ந்து பாரிய சத்தத்துடன் வெடித்தன என்றும்-

இதன்போது சம்பந்தப்பட்ட வீட்டில் இருந்த எவருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும்- தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - மேற்படி சம்பவத்தைய

(16 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளைப் பலவீனப்படுத்தும் வகையில்

## கருணாவை உருவாக்கியவர் ரணிலே புகழாரம் சூட்டுகின்றார் சமரவீர!

கொழும்பு, நவ.11

''கருணாவை உருவாக்கி புலிகளைப் பலவீனப்படுத்தியவர் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான்.

''மட்டக்களப்பில் இருந்து அரச பாதுகாப்புடன் கருணா குழுவினரை கொழும்புக்கு அழைத்து வந்த ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானாவை பின்னர் வெளிநாட்டிற்கு அனுப்பிய விடயம் மூடி மறைக்கப்பட்டுவிட்டது.

''ரணிலின் துரதிஷ்டம் நவீன்திஸநாயக்காவும், மிலிந்த மொறகொடவும் தக்க சமயத்தில் இதனை அம்பலப்படுத்திவிட்டனர். இவர்களுடைய கூற்று முற்றிலும் உண்மையானதே என்று அடித்துக் கூறுகின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார முகவரான அமைச்சர் மங்கள சமரவீர.

நேற்றுமாலை இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு கூறினார்.

புலிகளும் தமிழ் மக்களும் எங்களுடைய அரசாங்கமே கருணாவுக்கு ஆதரவாக இருப்பதாகக் குற்றம் சுமத்துகின்றனர். இதில் எந்த உண்மையும் இல்லை.

கருணாவைப் பிரித்து புலிகளைப் பலவீனப்படுத்தும் வகையில் காய் நகர்த்தியவர் ரணில்தான். இதை நாம் அப்போதே கூறியுள்ளோம். ஆனால், அதனை எல்லோரும் உதாசீனப்படுத்திவிட்டனர்.ஆனால் காலங்கடந்த பின்னராவது - அதாவது தக்க சமயத்தில் - ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## எலும்புக்கூடு எச்சங்கள் யாழ்.ஆஸ்பத்திரிக்கு!

ஏழாலை,நவ.11

ஏழாலை மேற்கில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட எலும்புக்கூட்டு எச்சங்களை நேற்று நேரில் சென்று பார்வையிட்ட மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன்-

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊடகங்களை ஒழுங்குபடுத்த தகுதிவாய்ந்த அதிகாரி நியமனம்?

கொழும்பு, நவ.11

ஜனாதிபதித் தேர்தல் இறுதிக்கட்டப் பிரசார நடவடிக்கையின்போது அரச ஊடகங்களை நடுநிலையாகச் செயற்பட வைக்கும் வகையில் தகுதிவாய்ந்த அதிகாரியொருவரை நியமிப்பதற்குத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தீர்மானித்திருக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

# குடாக்கடலில் ஒருவகை நச்சுநீர்?

- உடலில் பட்டால் நெருப்பினால் சுட்ட உணர்வு!
- வியர்வை துவாரங்களில் ஊசி குத்திய வேதனை!!
- எந்த வகையான மருந்துகளுக்கும் தீராத பாதிப்பு!!!

யாழ்ப்பாணம்,நவம்பர்11

**யாழ்.குடாக்கடலில் கரையை அண்டிய ஆழம் குறைந்த - கற்பாறைகளைக் கொண்ட - ஒரு பகுதிக் கடலில் ஒரு வகை நச்சு நீர் கலந்திருப்பதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.**

**தொழிலில் ஈடுபட்டிருக்கின்றபோது இந்த நீர் உடலில் பட்டதும் நெருப்பினால் சுட்டது போன்று - உடல் முழுவதும் ஊசியால் குத்துவது போன்று - தாங்கமுடியாத வேதனை ஏற்படுகிறது என்றும் மீனவர்கள் கூறுகின்றனர். இதன் தாக்கமும் வேதனையும் எந்த வகையான மருந்துகளுக்கும் தீராததாக இருக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.**

கடல் நீரிலிருந்து வேறுபடுத்திப்பார்க்க முடியாத வகையில் - நிறத்திலும் செறிவிலும் கடல்நீர் போன்றே கட்சியளிக்கிறது இந்த நச்சுநீர். கடந்த சில-நாள்களாக குடாக் கடலில் குறிப்பிட்ட சில பகுதிகளில் பல மீனவர்கள் இந்த நச்சு நீரின் தாக்கத்துக்கு இலக்காகியிருக்கின்றனர். இதனால் மீனவர்கள் தொழில் செய்வதற்கு அஞ்சுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. கடல்நீரில் ஏற்பட்டிருக்கின்ற இந்த மாற்றம் தொடர்பாக உடனடியான உரிய ஆய்வுகளை மேற்கொண்டு மீனவர்களைப் பாதிப்பிலிருந்து மீட்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாஷை யூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளருக்கு மகஜர் கையளித்திருக்கின்றனர்.

இந்த கடல் நீரின் மாற்றத்தினால் மீனவர்களால் உணரப்பட்ட தாக்கங்களையும் குறிப்பிட்டு அந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ்.குடாக் கடலை அண்மித்த ஆழம் குறைந்த பகுதியில், குறிப்பாக கற்பாறைகளை கொண்ட கடற்பகுதியில் 'நச்சு நீர்' அல்லது 'சுணை' என பெயர் குறிப்பிடப்படுகின்ற கண்களுக்குப் புலப்படாத நீர் தொழிலாளர்கள் தொழிலை மேற்கொண்டிருக்கும் போது உடலில் படுவதால் தாக்கம் ஏற்படுகிறது.

½cm அளவு பகுதியிலேயே நச்சுநீர் தாக்கியது உணரப்படும். பின்னர் உடல் முழுவதும் அதன் தாக்கத்தின் வேதனை பரவிவிடும். இந்தத் தாக்கம் ஒரு சிலருக்கு மரணத்தைக் கூட ஏற்படுத்தியுள்ளது. மேற்படி தாக்கத்திற்குள்ளானவர்களிடம் இருந்து பெற்ற அனுபவங்களை உள்ளடக்கிய மேலும் பல தகவல்களை தருகின்றோம்.

- இந்தத் தாக்கம் ஏற்பட்டதும் அக் கடற்பகுதியை அவதானித்தால் கண்ணுக்குத் தெரியக் கூடிய எந்தப் பொருளோ அல்லது அக் கடற்பகுதியில் நிறமாற்றமோ புலப்படமாட்டாது.
- தாக்கத்திற்குள்ளான உடற்பகுதியில் நெருப்பு சுட்டது போன்ற உணர்வு உடன் உணரப்படும்.
- அதிகமாக 30 நிமிட நேரத்திற்குள் உடல் முழுவதும் தாங்கமுடியாத வேதனை பரவிவிடும். இது 24 மணி வரை தணியாது. தாக்கத்தின் செறிவிற்கேற்ப 2,3 நாள்கள் வரை நீடிக்கும்.
- ஒரு மணி நேரத்தினுள் ஒவ்வொரு அணுவும் அல்லது வியர்வைத் துவாரமும் ஊசியால் குத்துவது போன்ற வேதனை உணரப்படும்.
- உடல் முழுவதும் குத்துவதால் தொடர் இருமலும், தும்மலும், மூக்கில் நீரும், கண்ணீரும், நாவில் அதிக உமிழ்நீரும் உண்டாகும்.
- சிறுநீர், மலம் கழிக்கமுடியாது.
- நச்சுநீர் பட்ட இடத்தில் ஏற்பட்ட எரிவு அல்லது அளத்தல் சாதாரண 'கடற்சொறி' தாக்கியது போன்றும் உணரப்படும்.
- தாக்கம் ஏற்பட்ட பின் உணவு அருந்தினால் அதன் வேதனை இரட்டிப்பாகும்.
- தென்மேற்குப் பருவக்காற்றுக் காலங்களில் கூடுதலாக இத்தாக்கம் ஏற்படுவதில்லை.
- எந்தப்பிரிவு வைத்திய முறைகளும் பயன்தருவதில்லை.

மேற்கூறிய அனுபவக் குறிப்புக்களை முன்னிறுத்தி ஆய்வுகளை மேற்கொண்டு தடுப்பு முறைகளையோ அல்லது தாக்கத்திற்கு உடன் நிவாரண மருந்துக்களையோ கண்டுபிடித்து தொழிலாளர்களுக்கு உதவ ஆவண செய்யுமாறு தங்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-190)

## சண்டிலிப்பாயில் சேவை மதிப்பீடு

வலி.தென்மேற்கு,நவ.11

வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்தினால் அடுத்த ஆண்டுப் பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகள் மற்றும் தேவைகள் பற்றிய மதிப்பீடுகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள சன சமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சமுர்த்திச் சங்கங்கள், விவசாயிகள் சம்மேளனங்கள் மற்றும் பொதுநல நிறுவனங்கள் ஆகியவற்றிக்கு நேரடியாகச் சென்று அபிவிருத்தி வேலைகள் மற்றும் தேவைகள் பற்றிய மதிப்பீடுகளை பிரதேச செயலக அலுவலர்கள் தற்போது திரட்டிவருகின்றனர். (எ-135)

## வீதியைத் திருத்தக் கோரிக்கை

பெரிய விளானிலிருந்து உயரப்புலம் ஊடாக மாரீசன் கூடல் வரை செல்லும் வீதி மக்கள் போக்குவரத்திற்குச் சீர் கெட்ட நிலையில் இருந்து வருவதால், இதனைத் திருத்தித்தருமாறு பெரிய விளான் புனித அந்தோனியார் சனசமூக நிலையம் மானிப்பாயிலுள்ள வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளரைக் கடித மூலம் கேட்டுள்ளது. (எ-135)

## தேர்தலை முன்னிட்டு 5 தினங்கள் யாழ். பாடசாலைகள் மூடப்படும்

யாழ்ப்பாணம்,நவ.11

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்களாக பாடசாலைகள் பயன்படுத்தப்படவுள்ளதால் யாழ். மாவட் டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளும் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை 5 தினங்கள் மூடப்பட் டிருக்கும் என்று யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனை அறிவித்துள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதால் 14 ஆம் திகதி தொடக்கம் பாடசாலைகளில் தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் காரணமாகப் பாடசாலைகள் அனைத்தும் 5 தினங்கள் மூடப்பட்டிருக்கும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-203)

## ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் வடமராட்சி மீனவர்களுக்கு உதவி



யாழ்ப்பாணம்,நவ.11

வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தால் (அலைன்ஸ் டெவலப்மன்) இரண்டுகோடி ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 7ஆம் திகதி மேற்படி நிறுவனத்தின் செயற்றிட்ட அலுவலர் எம்.பிரபோஸ் தலைமையில் தாளையடியில் நடைபெற்றது.

இதில் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் யூட் சிமியோன், யாழ். மாவட்ட இணைப்பாளர் சி.சத்தியசீலன் ஆகியோரும் உதவி வழங்கும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (த-13)

## ஊர்காவற்றுறை சுகாதாரப் பிரிவில் வாய்ப்புற்று நோய்ப்பரிசோதனை

### நாளை முதல் இரு தினங்கள் நடக்கும்

குருநகர்,நவ.11

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்காக நடத்தப்பட்டுவரும் வாய்ப்புற்றுநோய் பிரிசோதனை நாளையும் நாளைமறுதினமும் ஊர்காவற்றுறைச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பின்வரும் நிலையங்களில் நடைபெறும் என்று யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

வேலணை கிராமிய வைத்தியசாலை, புங்குடுதீவு மாட்ட வைத்தியசாலை, மண்டைதீவு சிகிச்சை நிலையம், அனலைதீவு சுற்றயல் கூறு, நயினாதீவு சுற்றயல் கூறு, எழுவைதீவு சிகிச்சை நிலையம் ஆகியவற்றில் நாளை சனிக்கிழமையும் - ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை, நாரந்தனை ஆரம்ப சுகாதார நிலையம், புளியங்கூடல் ஆரம்ப சுகாதார நிலையம், காரைநகர் சுற்றயல் கூறு, அல்லைப்பிட்டி ஆரம்ப சுகாதார நிலையம், நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் இந்தப் பரிசோதனை நடைபெறும்.

கனடாவில் வசித்த காலஞ்சென்ற திருமதி யோகராணி சிறிகிருஷ்ணன் ஞாபகார்த்த நிதியத்தின் அனுசரணையுடன் நலவாழ்வு அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை இந்த வாய்ப்புற்றுநோய்ப் பரிசோதனையை யாழ். மாவட்டத்தில் நடத்தி வருவது தெரிந்ததே. (எ-51)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.11

கரித்தாஸ் கீயூடெக் நிறுவனத்தின் இளவாலை பிராந்திய சமாதானக் குழு உறுப்பினர்களுக்கான வதிவிடப் பயிற்சிக் கருத்தரங்கு நாளையும், நாளைமறுதினமும் காலை 9 மணியளவில் யாழ். வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் சமாதானக் குழு ஊக்குவிப்பாளர் சியாழினி தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஒ-190)

## சட்ட விரோதமாக மின்னிணைப்பை பெற முயன்றவர் மின்தாக்கி மரணம்

### புலோலி மேற்கில் நேற்று மாலை சம்பவம்

சட்ட விரோதமாக வீட்டுக்கு மின் இணைப்பை ஏற்படுத்த முயன்றதாகக் கூறப்படும் நபர் மின்சாரம் தாக்கியதில் பலியானார்.

நேற்று மாலை 4 மணியளவில் புலோலி மேற்கு வாணர் குடியிருப்பில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த குடும்பஸ்தவரான கந்தசாமி அமிர்தலிங்கம் (வயது-41) என்ற குடும்பஸ்தரே பலியானவராவார். வீட்டுக்கு மின்சாரத்தைப் பெறுவதற்காக பிரதான வழிப் பாதையில் உள்ள மின் கம்பியுடன் இணைப்பை ஏற்படுத்திய போது இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துவரப்படும்போது இவர் மரணமாகியிருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சடலம் பிரேத பரிசோதனைக்காகவும் மரண விசாரணைக்காகவும் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இவரது இடது மார்பிலும் வலதுகையிலும் மின்சாரம் தாக்கிய காயங்கள் காணப்பட்டன. (எ-173)



யாழ். குடாநாட்டிலுள்ள எஸ்லோன் குழாய் பொருத்துநர்களை ஊக்குவிக்கும் முகமாக மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை எஸ்லோன் லங்கா நிறுவனம் - பரிசில்களை வழங்கிவருகின்றது. நேற்றுக்காலை யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள எஸ்லோன் லங்கா நிறுவனத்தின் யாழ். அலுவலகத்தில் நடந்த பரிசில்கள் வழங்கும் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பரிசில்களை, எஸ்லோன் லங்கா நிறுவனத்தின் பொருள் அபிவிருத்தி முகாமையாளர் ப.மகாதேவன், விற்பனை முகாமையாளர் பியந்த அபயக்கோன், பிரதேச விற்பனை முகாமையாளர் கே.ஜோன்சன் ஆகியோர் வழங்குவதையும் -

இதில் கலந்துகொண்ட எஸ்லோன் குழாய் பொருத்துநர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பிரபா)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஒட்டுப்படை விவகாரத்தில் வினை விதைக்கிறது தெற்கு

தமிழர் தாயகப் பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் அத்துமீறிய அட்டூழியங்களை அரசு மௌனமாகப் பார்த்துக் கொண்டிருப்பது ஏன்? சமாதான உடன்படிக்கை என்பது தென்னிலங்கைப் பெரும்பான்மை இனம் நிம்மதியாக வாழ்வதற்கு மட்டும் உருவாக்கப்பட்டதா?

- இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றது திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை.

அமைதி நிலையை - சமாதானச் சூழலை - தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி ஒருபுறம் தமிழர்களைத் தொல்லைப்படுத்தும் அரசு, மறுபுறம் தமிழர்களின் ஒரே பலமான விடுதலைப் புலிகள் அமைப்பையும், இந்த அமைதிச் சூழலைப் பயன்படுத்தி பலவீனப்படுத்தலாம் எனத் திட்டமிடுகின்றது.

இதன் விளைவே, ஒருபுறம் தமிழர் மீதான கெடுபிடிகள். மறுபுறம் ஒட்டுப்படைகளின் பெயரில் அடாவடித்தனங்கள்.

இந்த யுத்தநிறுத்த அமைதிக்காலத்திலும் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்து, தமிழர்களின் அன்றாட வாழ்க்கையைக் குழப்பி, அவர்களை அல்லலுறவைக்கும் அரசு, மறுபுறம் தென்னிலங்கையில் தனது சிங்கள மக்களுக்கு போரற்ற சூழலில் ஓர் இயல்பான வாழ்வை உறுதிப்படுத்தி நிற்கின்றது.

அதேசமயம், கிழக்கில் ஒட்டுப்படைக் கைங்கரியமும் தொடர்கின்றது.

ஒட்டுப்படை விடயத்தில் 'வினை விதைப்பவன் வினை அறுப்பான்' என்ற முதுமொழியின் அர்த்தத்தை அரசுத் தரப்பு புரியாமல் இருப்பதுதான் வேடிக்கையானது.

இன்று தென்னிலங்கையில் பாதாள உலகக் கோஷ்டியின் அட்டகாசம் - அடாவடித்தனம் - ஆதிக்கம் - அத்துமீறி, அளவு மீறி இடம்பெறுவது நமக்குத் தெரிந்த விடயம். இந்தப் பாதாள உலகக் குழுக்களின் வன்முறைக் கலாசாரத்தை எதிர்கொள்ள முடியாமல் தென்னிலங்கை தவிக்கிறது. இந்தச் சிக்கலின் மூலம் யார்? வினை விதைத்தவர்கள் யாவர்?

இன்று முப்பதாயிரத்துக்கும் குறையாத ஆயுதங்கள் - பெரும்பாலும் இயந்திரத் துப்பாக்கிகள், பிஸ்டல்கள் ரகத்தைச் சேர்ந்தவை - பாதாள உலகக் குழுக்களின் கைகளில் இருப்பதாக ஒரு புள்ளிவிவரத் தகவல் கூறுகின்றது.

இதுதவிர ஆயுதப் பயிற்சி பெற்ற - படைகளை விட்டு ஓடிய - இருபத்தையாயிரம் பேர் தென்னிலங்கையில் 'திறந்து விடப்பட்ட' நிலையில் உள்ளனர். அவர்களின் சரணாலயமாகத் திகழ்வது இந்தப் பாதாள உலகம்தான்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அழிக்கிறோம் என்ற பெயரில் தரம், தகைமை பார்க்காமல் தென்னிலங்கையில் வந்தவர், போனவர் எல்லோரையும் வகை, தொகை, கணக்கு வழக்கின்றி படைக்குத் திரட்டியதன் விளைவுதான் பாதாள உலகத்தை வலுப்படுத்தி விஸ்வரூபம் எடுக்க வைத்திருக்கின்றது.

அதேபோல தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைக் கூண்டோடு அழிக்கும் நோக்கில் ஒழுங்கு முறையின்றி வாங்கிக் குவித்த ஆயுதங்களே இன்று ஏதேதோ வழிகளில் கைநழுவி, பாதாள உலகக் குழுக்களின் கைகளைப் போய் அடைந்து, உச்ச மிரட்டலுக்கு மூல காரணமாகப் போயிருக்கின்றன.

தமிழர்களுக்கு எதிரானது என்ற பெயரில் தான் விதைத்த வினையை இப்போது பாதாள உலகம் என்ற வலையில் அறுக்கின்றது தென்னிலங்கை.

கிழக்கு ஒட்டுப்படை விவகாரத்திலும் அதேபோன்ற வினையை விதைத்து அறுக்கத் தயாராகின்றது இலங்கை அரசு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

கிழக்கில், பொலன்னறுவையை ஒட்டிய பிரதேசத்திலேயே கருணா குழு என்ற பெயரில் ஒட்டுப்படைகள் இயக்குகின்றன. அரச புலனாய்வுத்துறைதான் இவற்றை இயங்குகின்றன என்பது பரகசியம். ஆனால், அவை புலனாய்வுத் துறையுடன் தமது தொடர்புகளை நிறுத்திக் கொள்ளவில்லை. அப்பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள ஏனைய படையினருடனும், ஜே.வி.பி உறுப்பினர்களுடனும் இந்த ஒட்டுப்படைகள் தாராளமாகத் தொடர்புகளை வைத்திருக்கின்றன என்கின்றன உளவுத் தகவல்கள்.

ஜே.வி.பி.யினர் வன்முறைகளைக் கைவிட்டு ஜனநாயக அரசியலுக்குத் திரும்பிவிட்டார்கள் என்று கூறப்படுகிறது. அவர்கள் இவ்வாறு ஆயுத வழியைக் கைவிட்டு சுமார் ஒன்றரைத் தசாப்தங்களாகின்றன. ஜே.வி.பியில் ஆயுதப் பயிற்சி பெற்று, அவற்றை இயக்கக்கூடிய இளம் வயதில் எவரும் இப்போது இல்லை என்பது வாஸ்தவம்தான். ஆனால், ஆயுத வழியிலிருந்து ஜனநாயக அரசியல் வழிக்குத் திரும்பினார்கள் என்று கூறப்படும் ஜே.வி.பியினர் தம்மிடமிருந்த ஆயுதங்களை எந்தச் சமயத்திலும், அரசிடமோ அல்லது வேறு எவரிடமோ கையளித்தனர் என்பதற்குத் தகவல் - ஆதாரம் - ஏதும் இல்லை.

ஆயுதங்களை இயக்குவதற்கான பயிற்சியுடன் இளைஞர்கள் அவர்களிடம் இப்போது இல்லாவிட்டாலும் ஆயுதங்கள் இன்னும் அவர்கள் வசம் இருக்கின்றன என்பது தான் கணிப்பு.

இத்தகையோரும், இராணுவத்தினரின் ஒரு பிரிவினரும், கருணாகுழு போன்ற ஒட்டுப்படைகளுடன் நெருங்கிய தொடர்புவைத்திருப்பது விபரீதமான நிலைமைகளைத் தோற்றுவிக்கும் என்பதை தென்னிலங்கையில் பொறுப்புள்ள பலரும் உணரத் தலைப்பட்டிருக்கின்றார்கள்.

ஒட்டுப்படையை உருவாக்கப்போய், தென்னிலங்கையிலேயே ஓட்டை விழுந்து விடும் ஆபத்து உருவாகி வருவதாக சம்பந்தப்பட்ட பலரும் பொறுப்புடன் கவலைப்படுகின்றனர்.

அரசியல் தலைமைகளின் பொறுப்பற்ற போக்கு, புலனாய்வுப் பிரிவினரின் தீர்க்க தரிசனமற்ற - குறுகிய நோக்குடைய - சதித் திட்டங்கள் போன்றவை பொலன்னறுவைப் பக்கத்திலிருந்து தெற்குக்கு பேராபத்தை ஏற்படுத்தப் போகின்றன என்று அவர்கள் எச்சரிக்கின்றனர். விதைத்த வினையை அறுக்கப் போகிறது தென்னிலங்கை.

# 'டைனமற்' பயன்படுத்தி மீன்பிடிப்பது குடாக் கடற்பகுதியில் அதிகரிப்பு

## தடுத்துநிறுத்தும்படி மீனவர் வேண்டுகோள்

குருநகர், நவ.11

குடாக்கடலில் 'டைனமற்' வெடிகுண்டைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் சட்ட விரோத நடவடிக்கை அதிகரித்துள்ளதாக முறைப்படி கடற்றொழிலில் ஈடுபடுவோர் கவலை தெரிவிக்கின்றனர்.

'டைனமற்' கொண்டு மீன்பிடிப்பது நாடளாவிய ரீதியில் சட்டவிரோதமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கங்கள் தமது மீனவர்களுக்கு இதுகுறித்து அறிவுறுத்தியுள்ளன. ஆனாலும் 'டைனமற்' பயன்படுத்தி மீன்பிடிப்பதில் சிலர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரியவந்துள்ளது.

இத்தொழிலில் ஈடுபட்ட குருநகரைச் சேர்ந்த சிலர் 'டைனமற்' வெடிப்பில் சிக்கி தமது அவயவங்கள் சிலவற்றை இழந்து ஊனமாகியுமுள்ளனர். 'டைனமற்' மூலம் மீன் பிடிப்பதனால் கடலில் உள்ள மீன் இனங்கள் மிக விரை வில் அழிந்துபோய்விடுவதுடன் தொடர்ந்தும் மீன்பிடிக்க முடியாதநிலை உருவாகலாம்.

இத்தொழிலில் ஈடுபடும் மீனவர்களை இனங்கண்டு இவர்கள் மீது சட்ட நட வடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் -

'டைனமற்' கொண்டு பிடிக்கப்படும் மீன்களைச் சந்தைப்படுத்துவதற்கு சந்தைகளில் இடமளிக்கக் கூடாது எனவும் - பொது மக்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

இதேவேளை, குருநகர் கடலில் நேற்றுமுன்தினம் காலை 6.30 மணிக்கு மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் 'டைனமற்' வெடித்ததால் ஏற்பட்ட அதிர்வால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். குருநகரைச் சேர்ந்த குடியப்பு அரியதாஸ் (வயது 40) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடலுக்குள் இவர் கடலட்டை பிடித்துக் கொண்டிருந்தார் என்றும் -

அப்போது 'டைனமற்' வெடித்த அதிர்வால் பாதிக்கப்பட்ட அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும்-

எனினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-13-51)

# தேர்தலையொட்டி பதிவகம் இயங்காது

யாழ்ப்பாணம், நவ.11

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் 14ஆம் திகதியில் இருந்து 18ஆம் திகதி வரை யாழ். செயலகத்தில் உள்ள காணி, மாவட்டப் பதிவகத்தில் பிறப்பு, இறப்பு, விவாகம் மற்றும் காணி தொடர்பாக விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று யாழ்ப்பாண காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் பி.பிரபாகர் தெரிவித்துள்ளார். (ஒ-203)

# தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 500 பேரின் பல்கலைக்கழக அனுமதி கேள்விக்குறி

கொழும்பு, நவ.11

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளவர்களில் சுமார் 500 விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களை நிராகரிக்க வேண்டிய நிலை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்றி, பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்தோர் வதியும் மாவட்டத்தை உறுதிப்படுத்த அவர்கள் பயின்ற பாடசாலைகளிலிருந்து பெறப்பட்ட விலகல் சான்றிதழின் மூலப்பிரதி விண்ணப்பங்களோடு இணைக்கப் படவேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆயினும், இத்தகையோரில் சுமார் 500 விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட சான்றிதழின் மூலப்பிரதியை இணைக்கவில்லையென மானிய ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளரான பிரியன்த்த பிறேமகுமார தெரிவித்துள்ளார். (ஒ-206)



ஏழாலை மேற்கில் படையினரின் மணல் அணைக்குச் சமீபமாக நேற்றுமுன்தினம் கண்டெடுக்கப்பட்ட இரண்டு மண்டையோடுகள் மற்றும் இரு கீழ் தாடை எலும்புகள் ஆகியவற்றைப் படத்தில் காணலாம். (படம்:நேசன்)

# தொண்டைமானாறு கடற்கரையில் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், நவ.11

தொண்டைமானாறு கடற்கரையில் கரை ஒதுங்கியதாகத் தெரிவித்து இளைஞர் ஒருவரின் சடலம் பலாலி பொலீஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுக்காலை ஒப்படைக்கப்பட்டது.

கடற்கரையில் சடலம் ஒதுங்கியதை அறிந்த பொலீஸார் தெரிவித்ததன் பேரில் மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார். பின்னர் அவர் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

சுமார் 20 அல்லது 30 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் சடலத்தில் கறுப்புநிறக் காற்சட்டை மட்டுமே காணப்படுகிறது.

இந்தச் சடலத்தை அடையாளம் காண்பதற்கு உதவுமாறு பொதுமக்களை ஆஸ்பத்திரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி சார்ஜன்ட் ஜேக்கப் கேட்டுள்ளார். (ஒ-13)

# தீவகத்துக்கு படைக் கப்பல், ஹெலி மூலம் வாக்குச் சீட்டுகள் அனுப்பப்படுமாம்

யாழ்ப்பாணம், நவ.11

தீவுப் பகுதிக்கான வாக்குச் சீட்டுகள் கடற்படைக் கப்பல் மூலமும், நெடுந்தீவுக்கான வாக்குச் சீட்டுகள் ஹெலி மூலமும் எடுத்துச் செல்லப்படவுள்ளன என்று யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தீவகத்துக்கான வாக்குச்சீட்டுகள் யாழ். தேர்தல் திணைக்களத்திலிருந்து பாதுகாப்புக் காரணங்களுக்காக கடற்படைக் கப்பல்கள் மூலம் எடுத்துச் செல்லப்படும்.

வாக்குப் பெட்டிகள் மீள எடுத்து வரப்படும் பொழுது நெடுந்தீவின் வாக்குப் பெட்டிகள் ஹெலிகொப்டர் மூலமும் ஏனைய தீவுகளின் வாக்குப் பெட்டிகள் கடற்படைக் கப்பல்களிலும் எடுத்து வரப்படும்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை- நெடுந்தீவுப் பிரதேசத்தில் நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும் நயினாதீவில் நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளன. (ஒ-202-204)

**நாளை**

ஐப்பசி 26
சனிக்கிழமை
12.11.2005
திதி: ஏகாதவி
பிற்பகல் 12.17 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி
பின்னிரவு 03.23 வரை
சுபநேரம்: 03.06 - 04.36
ராகுகாலம்: 09.06 - 10.36
(யாவும் பழைய நேரப்படி)

## கள்ள வாக்குகளைத் தடுப்பதற்கு

# வெளிநாடு சென்ற வாக்காளரின் பெயர், விவரங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

யாழ்.மாவட்டத்தில் கள்ளவாக்குகள் போடப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கையில் ஒன்றாக வெளிநாடுகளில் வசிக்கும் வாக்காளர்களின் விவரங்களைச் சேகரிக்கும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வசிப்பவர்களின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்கும்படி கோரும் சுற்றறிக்கையை யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சி.குகநாதன் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இதனையடுத்து, வெளிநாடுகளில் வசிப்போரில் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளவர்களின் பட்டியலை கிராம அலுவலர்கள் தயாரித்து வருகின்றனர்.

இதற்கிடையில் வெளிநாடுகளில் வசிக்கும் வாக்காளர் விவரங்களைச் சேகரிப்பதில் கிராம அலுவலர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று கூறப்படுகிறது.

பல குடும்பத்தினர் நிவாரணம் பெறுவதற்காக தமது உறுப்பினர்கள் வெளிநாடுகளில் இருந்தாலும் யாழ்.குடாநாட்டுக்கு வெளியால் வன்னி, வவுனியா, கொழும்பு, கண்டி பேன்ற நகரங்களில் தங்கியுள்ளனர் என்றே கூறுகின்றனர்.

இதனால் சரியான பட்டியலை கிராம சேவையாளர்களால் தயாரிக்க முடிவதில்லை என்று கூறப்படுகிறது. (ஒ-86-167-202-204)

**உதயவாக்கு**

தேவைகளைக் குறைத்துக் கொண்டவன் தெய்வத்தின் அருகே இருப்பான்.

*ஆபிரகாம்லிங்கன்.*

# வலிகாமம் வலய உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,நவ.11

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 16 வயதுப் பிரிவில் அருணோதயாக் கல்லூரியும் 18 வயதுப் பிரிவில் புனித ஹென்றியரசர் கல்லூரியும் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டங்கள் இடம்பெற்றன.

16 வயதுப் பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக்கொண்டன. விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணியை வெற்றி கொண்டு வலய சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

18 வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இந்த ஆட்டத்தின் முடிவில் 1:0 என்ற கோல்கணக்கில் புனித ஹென்றியரசர் கல்லூரி மானிப்பாய் இந்துக்கல்லூரியை வெற்றி கொண்டு சம்பியன் பட்டம்வென்றது.

கோட்ட மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகளில் இறுதியாட்டங்களில் மோதிய அணிகளே வலயமட்ட போட்டியின் இறுதியாட்டங்களிலும் மோதின என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-86)



உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் 16 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்ட அணியினர் முதற்றடவையாக கோட்டமட்டப் போட்டியில் பங்கேற்றுவென்று வலய மட்டத்திற்கு தெரிவாகினர். அணி வீரர்கள்,தமது பாடசாலை அதிபர், உபஅதிபர், ஆசிரியர்களுடன் எடுத்துக் கொண்ட படம் இது.

**விளையாட்டு**

# வலயமட்ட 12 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டம்: யாழ்.மத்தி வெற்றி

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ்.கல்வி வலய மட்டத்தில் முதற்றடவையாக இடம்பெற்ற 12 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான உதை பந்தாட்டப்போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது. இந்த இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியும் நாவாந்துறை ஆர். சி.வித்தியாலய அணியும் மோதின.

இதில் யாழ்.மத்திய கல்லூரிஅணி நாவாந்துறை ஆர்.சி.மகாவித்தியாலய அணியை 1:0 என்ற கோjல் கணக்கில் வெற்றி கொண்டது. இதைத் தொடர்ந்து மூன்றாவது இடத்திற்கு இடம்பெற்ற ஆட்டத்தில் திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயமும் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயமும் மோதிக்கொண்டன. இரு அணிகளும் ஆட்ட நேரத்தில் கோல் எதனையும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு உதை மூலம் 3:1 என்ற கோல் கணக்கில் திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது. (ஓ-190)

# கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,நவ.11

ஹற்றன் நஷனல் வங்கி பாடசாலைகள் மற்றும் கழகங்களுக்கிடையே ஆண் மற்றும் பெண்கள் பிரிவுகளில் கூடைப்பந்தாட்டப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் மற்றும் பாடசாலைகள் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்.கிளையில் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அணி ஒழுங்கு தெரிவு எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு வங்கியின் யாழ்.கிளையில் நடைபெறவுள்ளது. (ஓ-202)

# மாவீரர் தினத்தையொட்டி விளையாட்டுப் போட்டிகள்

எதிர்வரும் மாவீரர் நாளையொட்டி தென்மராட்சியில் விளையாட்டுப் பேரவை "மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்காக" தென் மராட்சி ரீதியிலான கிரிக்கெட் "செற்றப்" முறையிலான கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளை நடத்தவிருக்கின்றது. இப்போட்டிகள் யாவும் எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன.

இப்போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பங்களைத் தென்மராட்சி விளையாட்டுப் பேரவைச் செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு அதன் செயலாளர் வை. இராஜேஸ்வரன் கேட்டுள்ளார். (ஓ-75)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### குமாரசாமி சண்முகநாதன்

(M.A., SLPS CLASS I)



அகவை அறுபது 11.11.05
ஆசிரியர் பணி 20 வருடம்
அதிபர் பணி 14 வருடம்
சிரேஷ்ட விரிவுரையாளராக 15 வருடம் (NIE)
பிரதிக் கல்விப் பணிப்பாளராக ஒரு வருடம்

அறிவொளி பரப்பும் நல்லாசானாய்
பல்கலை புகட்டும் சாலை அதிபராய்
அகஇருள் நீக்கும் வல்லாசானாய்
நல்வழிகாட்டும் பிரதிப் பணிப்பாளராய்
அகவை அறுபதுகண்ட பண்பாளரே!
பல்லாண்டு பல்லாண்டு வாழியவே.

வலிகாமம் கல்வி வலயம்.
வலயக் கல்விப் பணிப்பாளர்
பிரதி, கோட்ட, உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்.

(42659)(18-19-45)


## 09.11.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 1657

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200740977 இலிருந்து 200757407 வரை

வெற்றி எண்கள்

**26 33 36 49** சுப்பர் எண் **15**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.1,27,72,550/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,27,72,550/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 21 | 5,000/- | 1,05,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 436 | 1,000/- | 4,36,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,416 | 500/- | 7,08,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 21,265 | 40/- | 8,50,600/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,256 | 20/- | 4,05,120/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,02,532 | 10/- | 30,25,320/- |
| | | மொத்தம் | 75,30,040/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,சைக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 80,30,040/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 1,35,80,800/-

தொடர் இல. 300705338 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 நொவம்பர் 12 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

| | |
|---|---|
| புத்தளம் | 200750081-1-27 |
| குருநாகல் | 200744630-4-44 |
| மொனராகலை | 200742422-6-00 |
| பொலன்னறுவை | 200753981-0-62 |
| திருகோணமலை | 200753840-6-15 |

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,செண்ட் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# 63 நாயன்மார் குருபூசை

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆச்சிரமத்தில் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு63 நாயன்மார்களின் குருபூசை நிகழ்வு நடைபெறவுள்ளது.

தூர இடங்களில் இருந்து ஆலயத்திற்கு வருகைதரும் அடியார்களின் நன்மைகருதி இன்று பிற்பகல் 4 மணிவரை ஆச்சிரமத்தில் அன்னதானம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-203-ரி)

# கல்விப் போட்டிகள்

கோண்டாவில்,நவ.11

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் பொன்விழாவையொட்டி கல்விப் போட்டிகளை நடத்தவுள்ளது. இப்போட்டிகள் எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் 4.30 மணிவரை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கட்டுரை, கவிதை, பேச்சு, பொது அறிவு போன்ற போட்டிகளில் பங்குபெற விண்ணப்பித்த மாணவர்களுக்கான சுட்டெண்கள் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-49)

# உடுபுடைவைகள் அன்பளிப்பு

வலி.தென்மேற்கு,நவ.11

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 125 குடும்பங்களுக்கு உடுபுடைவைகளை விரைவில் வழங்கவுள் ளதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-135)

# தென்மராட்சி கிராம அலுவலருக்கு

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற உள்ள தேர்தல் தொடர்பான கலந்துரையாடலுக்கு சகல கிராம அலுவலர்களையும் சமுகமளிக்கும்படி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# அமைய ஊழியருக்கு நிரந்தர நியமனம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைய ஊழியர்களாக கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலை வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.பத்தமநாதன் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பல வருடங்களாக அமைய ஊழியர்களாக கடைமையாற்றிய 13 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் -

இவர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் சுகாதார அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் -

அக் கடிதங்கள் இன்று உரியவர்களிடம் கையளிக்கப்படும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-13)

## மரண அறிவித்தல்கள்

### செபமாலை ஆசீர்வாதம்



கச்சாய் வடக்கு, மாதா கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை ஆசீர்வாதம் 09.11.2005 புதன் கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செபமாலை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைரவர் தம்பதியினரின் அன்பு மருமகனும் மரியம்மாவின் அன்புக் கணவரும் ஸ்பம்பதி, பிரான்ஸிஸ் சேவியர் (பிரான்ஸ்), இருதயநேசன் (ஜேர்மனி), அருள்நேசம் (ஜேர்மனி), ஜெயநேசம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயாதேவி, றஜிதா, சாந்தா (ஜேர்மனி), பவுஸ்ரின் (ஜேர்மனி), டயஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் மற்றும் பிலோமினா (ஜேர்மனி), மரியநாயகம் (கனடா), பூமணி (ஜேர்மனி), அருளானந்தம் (கனடா) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான எட்வேட், தம்பையா, சின்னாச்சி மற்றும் இரத்தினம், நவரத்தினம், றஞ்சி, ஜெயா ஆகியோரின் மைத்துனரும் ஸ்பரீனா (**HND** மாணவி, **IIS City Campus**), ஸ்ரனிலாஸ், ஸ்ரனிஸ்ராஜ், ஸ்வர்ணகா, ஜெயசீதா, டியூறியா, றொஜிஸ்ரன் (ஜேர்மனி), றொசாறியா (ஜேர்மனி), பெனக்ஸ்சீனா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.11.2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புனித செபமாலை மாதா கோயிலில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பூதவுடல் அல்லாரை கொப்புலவு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஆ.ஸ்பம்பதி**
(ராசா - மகன்).

கச்சாய் வடக்கு,
மாதா கோயிலடி
கொடிகாமம்.

(42644)(21.14.19)

### முத்தையா குணரெத்தினம்

(ஓய்வுபெற்ற லிகிதர், மாநகரசபை)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் 12ஆம் வட்டாரம், புங்குடுதீவை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா குணரெத்தினம் நேற்று (10.11.2005) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - பொன்னம்மா தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மரகதத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஸ்ரீகுணபூஷணி, குபேரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் சுந்தரலிங்கம் (நியூ சரஸ்வதி விலாஸ், பரமேஸ்வராச்சந்தி), யோகாம்பிகை(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் பர்மிளா,ஜியாமிளா,சதீஸ்(யா/வைத்தீஸ்வராக் கல்லூரி),துஷாயினி(யா/வேம்படி உயர்தரப் பாடசாலை), சுஜித்தா, சிவாசினி,அனித்தா(பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் **Dr.**பேரின்பநாதன், வைத்திலிங்கம்(கண்ணன் லொஜ், பரமேஸ்வராச் சந்தி) ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.11.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி.சுந்தரலிங்கம்**
(மருமகன்).

884/1, பலாலி வீதி,
திருநெல்வேலி.

(42633)(18.45.19)

# தாயகத்தில் பனைவளம் அழிகிறது. பாதுகாப்பது அனைவரதும் கடமை!

## பொருண்மிய துணைப் பொறுப்பாளர் அறிவுறுத்து

பரந்தன்,நவ.11

எமது தேசிய வளமான பனைவளம் முற்றாக அழிந்து வருகின்றது. இது எமது சமூக, பொருளாதார, சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில் அழிக்கப்படுகின்றது. இதனை நாங்கள் கட்டுப்பாடு இன்றி விடுவோமாயின் தமிழீழத்தைக் கட்டியெழுப்பும் போது தமிழீழ தேசம் பாலைவனமாக மாறும் அபாயம் உள்ளது.

- இவ்வாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுத் துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை தெரிவித்தார்.

பனைவளம் அழிவது தொடர்பாகக் கடந்த 7ஆம் திகதி பளைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

பொருண்மியத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சங்கர் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் துணைப் பொறுப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

எஞ்சி இருக்கும் பனை வளத்தையாவது பாதுகாக்க நாம் தீர்மானித்துள்ளோம். எமது வாழ்நாள் காலத்தில் நாங்கள் நாட்டிய பனை விதை முளைத்து மரமாகி நாங்கள் பயன் பெறுவது இல்லை.

எமது மூதாதையர்களான எமது பேரன், பூட்டன் காலத்தில் அவர்கள் நாட்டிய பனை விதைகள் முளைத்து பயன்தந்த பனைகள் யுத்தத்தில் பேரழிவுகளைச் சந்தித்தன. எஞ்சிய நிலையில் இருப்பதனையும் தறித்து அழிக்கின்றோம்.

இரண்டு வகையான அழிவுகளைப் பனை வளம் சந்தித்தது. இதில் ஒன்று ஸ்ரீலங்கா இராணுவம் திட்டமிட்ட வகையில் தமிழர்கள் மீது போரைத் தொடுத்து அதன்பால் தமிழரின் தேசிய வளமான பனை வளத்தை அழித்தது.

அடுத்து ஆழிப்பேரலை என்கின்ற இயற்கை அனர்த்தத்தின் காரணமாகக் கடற்கரையோரத்தில் உள்ள பனை வளம் முற்றாக அழிக்கப்பட் டுள்ளது. இதனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

இந்த வளத்தைப் பாதுகாக்கவேண்டும். நாமும் எமது பின் சந்ததியினரும் வாழ்வதற்குரிய ஒரு மாற்று வழியைப் பின்பற்ற வேண்டும். குறிப்பாக, வன்னிப் பெருநிலப் பரப்பில் கட்டப்படும் கட்டடங்கள், வீடுகள் யாவும் இறக்குமதி செய்யப்படும் மரங்களைக் கொண்டே அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒரு பனைமரம் விதை நாட்டி 50, 75, 100 வருடங்களில் தான் மரத்தேவைக்குப் பயன்படுத்தலாம். நாங்கள் இப்போது தறித்து அழிப்பது பல வருடங்களுக்கு முன்னர் நாட்டிய பனைமரமே. சொந்தக் காணியில் ஒருவர் வீடு கட்டவேண்டுமானால் அவர் அந்த இடத்தில் நிற்கும் சொந்தப் பனையைத் தறித்து அந்தத் தேவைக்குப் பாவிப்பதற்கான அனுமதியினை வழங்கி வருகின்றோம். அத்தோடு, வீட்டுக்கு இடைஞ்சலாக அல்லது வேறு அத்தியவாசியத் தேவைகளுக்கு இடைஞ்சலான பனைமரங்களை அகற்றவும் அனுமதி வழங்கப்படுகின்றது. இதற்கான அனுமதியை அந்தப் பகுதியில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற்று தமது சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தமுடியும்.

பனை மரங்களைத் தறித்து பனைமரக் காலைகளில் விற்பனை செய்வதையும், வீடுகளில் விற்பனை செய்வதையும் முற்றாக நிறுத்துவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பனை மரத்தைத் தறித்து பாவனைக்கு ஏற்ற மரமாக்கும் தொழிலாளர்களுக்கு மாற்றுத் தொழில் வசதியை ஏற்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தைக் கூட்டி அவர்களின் வாழ்வையும் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்று அவர் தெரிவித்தார்.

(த-352-202)

## ஐ.நா.தினம் அனுஷ்டிப்பு

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் உள்ள பாலிநகர் மகாவித்தியாலயத்தில் ஐக்கிய நாடுகள் தின விழா அண்மையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

துணுக்காய் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.பரந்தாமன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மங்கள விளக்கை 'யுனிசெவ்' நிறுவனத்தின் வதிவிட தலைமையதிகாரி திருமதி பெனிபுறாஸ் ஏற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்தார்.

சிறப்புரையாற்றிய அவர் தமது உரையில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தோற்றம், அமைப்பு, இணைந்த நிறுவனங்கள் அவற்றின் கடமை என்பவற்றைச் சுட்டிக்காட்டிய அவர் 'யுனிசெவ்' நிறுவனத்தின் தொடர் பணிகள் பற்றியும் அது இலங்கையில் ஆற்றி வரும் சேவை குறித்தும் விரிவாக விளக்கமளித்தார்.

இந்த நிகழ்வில் துணுக்காய் வலய நிர்வாக அதிகாரி செ.மெற்றாஸ்மயில், உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜபாலன், பாடசாலை அதிபர் து.யேசுதானந்தன் ஆகியோரும் உரையாற்றினர். துணுக்காய் வலயப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (த-88)



ஜெயபுரம் தென்னியந்திய திருச்சபையின் சிறுவர் பகல் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வின்போது சிறுவர்களின் 'பான்ட்' வாத்திய இசையுடன் ஏனைய சிறுவர்கள் மாலை அணிவிக்கப்பட்டு மேடைக்கு அழைத்துச் செல்லப்படும்போது எடுக்கப்பட்ட படம் இது. (படம்: முழங்காவில் செய்தியாளர்)




## கொட்டும் மழையில் நனைந்தவாறு பஸ்ஸுக்குக் காத்திருக்கும் பயணிகள்

### பூநகரியில் பஸ்தரிப்பிடம் இல்லாததால்

பூநகரி,நவ.11

பூநகரி, வாடியடியில் பஸ்தரிப்பிடம் இல் லாததால் பயணிகள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் தினமும் 5 பஸ் சேவைகள் இடம்பெறுகின்றன. பஸ்தரிப்பிடம் ஒன்று இல்லாமையால் பயணிகள் தற்போது தினமும் கொட்டும் மழையில் நனைந்தபடி பஸ்ஸுக்குக் காத்திருக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள் வரை மழையில் நனைந்தவாறே பஸ்ஸுக்குக் காத்திருக்கின்றனர். இதனால், அவர்கள் தத்தமது பணிகளுக்கு நனைந்த ஆடைகளுடன் சென்று சிரமப்படுகின்றனர். எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து இங்கு பஸ்தரிப்பிடம் ஒன்றை அமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(த-403-202)

## சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு சுகாதார சேவையினர் அறிவுறுத்து

கிளிநொச்சி,நவ.11

தமிழீழப் பிரதேசத்தில் இயங்கும் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் அனைத்துக்கும் சில அறிவுறுத்தல்களைத் தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப்பணியகம் விடுத்துள்ளது.

பணியகம் விடுத்துள்ள அறிவுறுத்தல்கள் வருமாறு:-

✱ முகச்சவரம் மேற்கொள்ளும்போது அந்நபரின் முன்னிலையில் புதிய பிளேட் பாவனைக்கு எடுக்கப்படல் வேண்டும்.

✱ போர்வையாகப் பயன்படுத்தும் துணி நாளாந்தம் கழுவப்பட்ட தூய்மையான துணியாக இருக்கவேண்டும். அத்துடன், ஒரு கதிரைக்குக் குறைந்தது மூன்று துணிகள் வீதம் இருத்தல் வேண்டும்.

✱ முகச்சவரம் மேற்கொள்ளப் பயன்படுத்தும் கத்தி 20-30 நிமிடம் சவலோனில் இடப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்ட கத்தியாக இருப்பதோடு ஒரு கதிரைக்கு இரண்டு கத்திகள் வீதம் இருத்தல் வேண்டும்.

✱ முகச்சவரத்தின் பின் முகம் துடைக்கத் தூய மென்தாள்களை மட்டும் பயன்படுத்த வேண்டும்.

✱ முகச்சவரங்களுக்குக் கட்டிச்சவர்க்காரங்களைப் பயன்படுத்தாது அதற்கென வியாபார நிலையங்களில் விநியோகிக்கப்படும் திரவ நிலையான போத்தல்கள், ரியூப்களில் வரும் தூய்மைப்படுத்தும் ஊடகங்களை மட்டும் பயன்படுத்தவேண்டும்.

✱ நிலையத்தின் கழிவுகளான முடி தனியாகவும் ஏனைய கழிவுகள் தனியாகவும் சேகரிக்கப்பட்டு தகுந்தோரின் ஆலோசனைகளிற்கமைவாக இறுதியகற்றல் மேற்கொள்ளல் வேண்டும். (த-202)

## பெரும்போகச் செய்கை குறித்து நெடுங்கேணியில் கலந்துரையாடல்

பரந்தன்,நவ.11

பெரும்போகப்பயிர்ச்செய்கை மற்றும் கால்நடைஅபிவிருத்தி தொடர்பாக வவுனியா மாவட்டக் கமக்கார அமைப்புகளுக்கான கலந்துரையாடல் ஒன்று கடந்த 2ஆம் திகதி நெடுங்கேணி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவன வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் செ.ராகுலன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பெரும்போகத்தில் மேட்டுநிலத்தில் மானாவாரியான மறுவகைப் பயிர்ச்செய்கை, அதனால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப் பணியகத் திட்ட அலுவலர் கி.ஆறுமுகம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-352-202)

## கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் பகுதியில் 15 ஆயிரம் பனம் விதைகள் நடுகை

பரந்தன்,நவ.11

பனை விதை நடுகைத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 15 ஆயிரம் பனை விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

திட்டத்தின் ஆரம்ப வைபவம் கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது.

வவுனியா கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் ஆகிய பகுதிகளில் இராணுவ நடவடிக்கை காரணமாக அழிக்கப்பட்ட பனைகளுக்கு ஈடாக இந்த நடுகைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் இராகுலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கமக்கார அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(த-352-202)

## வவுனியா வடக்கில் கொல்களம் அமைக்குமாறு கோரிக்கை

புளியங்குளம்,நவ.11

வவுனியா வடக்குப் பகுதியில் கொல்களம் ஒன்றை அமைத்துத்தருமாறு மேற்படி பிரதேச இறைச்சிக் கடை உரிமையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வவுனியா வடக்கில் 3 இறைச்சிக் கடைகள் இயங்குகின்றன. அவற்றிற்கு வேண்டிய இறைச்சியை சுத்தப்படுத்தி எடுப்பதற்கான கொல்களம் அங்கு இல்லை. இதுதொடர்பாகச் சம்பந்தப்பட்டோர்களுக்குப் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

கொல்களம் இல்லாமையால் மழை காலத்தில் பல சுகாதாரப் பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும் என்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

(த-355-202)

## சிறுவர் தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள்

புதுக்குடியிருப்பு,நவ.11

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு வலயத்திலுள்ள புதுக்குடியிருப்பு கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற கவிதை, கட்டுரைப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் முறையே வருமாறு:

**பிரிவு I - கட்டுரைப்போட்டி**

பா.துவாரகா ( சிவநகர் தமிழ் வித்தி.), ஜெ.தட்சாயினி (கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தி.), வி.கெலின்ராஜ் (இரணைப்பாலை றோ.க.ம.வி.).

**பிரிவு I - கவிதை**

ர.அனோயிதன் (வேணாவில் சிறிமுருகானந்த வித்தி.), சி.ஆரணி (சிறிசுப்பிரமணிய வித்தி.), அ.ஜெனந்ஜெனனி (இரணைப்பாலை றோ.க.ம. வித்தி.).

**பிரிவு II - கட்டுரை**

இ.ஆன் அர்சனா (இரணைப்பாலை றோ.க.ம.வித்தி.), சோ.தர்சா (உடையார்கட்டு ம.வித்தி.), சி.தனஞ்சயன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**பிரிவு II - கவிதை**

சி.கிருசாந்தி (விசுவமடு ம.வித்தி.), செ.தனுஜா (புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி.), கா.கார்த்திகா (கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தி.).

**பிரிவு III - கட்டுரை**

க.பானுப்பிரியா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), த.தேவறஞ்சினி (விசுவமடு ம.வித்தி.), அ.யூலிட்நிருஜா (இரணைப்பாலை றோ.க.வித்தி.).

**பிரிவு III கவிதை**

ம.றோகினி (புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி.), வி.நிதர்சனா (உடையார்கட்டு ம.வித்தி.), பா.ரேகா (விக்கினேஸ்வரா வித்தி.).(த-353)

# செஞ்சிலுவைச் சங்க ஆளுநர் சபையில் தமிழர்கள் மூவர்

நல்லூர், நவ.11

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆளுநர் சபை உறுப்பினர் பதவியில் இம்முறை தமிழர்கள் மூவர் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு தேசியத் தலைமையகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், ஆளுநர் சபைத் தேர்தல் ஆகியன அண்மையில் ஜெகத் அபயசிங்க தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத்தின் யாழ்.கிளை உப தலைவர் கு.பாலகிருஷ்ணன், திருமலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி எஸ்.ஞானகுணாளன், மட்டக்களப்பைச் சேர்ந்த எஸ்.வசந்தராஜா ஆகியோர் ஆளுநர் சபைக்குத் தெரிவானார்கள்.

பத்து உறுப்பினர்களைக் கொண்ட ஆளுநர் சபையில் மூன்று தமிழ் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது இதுவே முதல் தடவை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (8-111)


## வேலை வாய்ப்பு

டோகா, கட்டார் நாட்டில் அரசாங்க முதன்மைக் கம்பனியில் 520 வேலை வாய்ப்பு உள்ளன.

பயணம் 1 1/2 மாதத்திற்குள்

| தொழில்கள் | தொகை |
|---|---|
| தச்சு வேலை செய்வோர் | 200 |
| கம்பி கட்டுபவர் | 50 |
| மேசன் (கட்டுபவர்கள்) | 100 |
| மேசன் (பூசுபவர்கள்) | 100 |
| மேசன் (மாபிள் பதிப்பவர்கள்) | 50 |
| அலுமினியம் பொருத்துபவர்கள் | 20 |
| மின்சார வேலையாள்கள் (வீட்டு மின் இணைப்பு) | 20 |
| வாகன மின்சாரவேலை செய்பவர் | 10 |
| பைப் பொருத்துபவர்கள் | 20 |
| ஸ்பிறே பெயின்ரர் / ரிங்கர் (வாகனம்) | 20 |
| பார வாகனம் ஓட்டுபவர்கள் | 20 |
| (ரவர் ரெயின், றேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர், ஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்) | |
| கைற்றொனிக் மெக்கானிக் | 10 |

**கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்**

பாஸ்போட்
பாஸ்போட் அளவு புகைப்படம் 05
குறிப்பிட்ட தொழில்களுக்குரிய சான்றிதழ்கள் இருப்பின் கொண்டுவரவும்.

(42385)(21.15.45.50)

**தொடர்பு : மைக்கல்**
**0777 279813**

குறிப்பு : முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.


# விஞ்ஞான தின விழா

யாழ்ப்பாணம், நவ.11

வலிகாம வலய விஞ்ஞான ஆசிரியர் சங்கம் நடத்தும் உலக விஞ்ஞான தின விழாவும் பாராட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பிரதி அதிபர் ஆர்.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.விஜேந்திர சர்மா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் வலிகாமம் வலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் பொ.நாகரட்ணம், குட்டியப் புலம் ம.வி. ஆசிரியர் எஸ்.கணேசகுமார், மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் செல்வி சி.சிவமலர் ஆகியோர் கௌரவிக் கப்படவுள்ளனர். (ஒ-203)

# திருட்டு முயற்சி முறியடிப்பு

தென்மராட்சி, நவ.11

வீட்டில் எவரும் இல்லாத வேளையில் உள்நுழைந்த திருடன் அங்கிருந்த தொலைக் காட்சிப் பெட்டியை அபகரித்துச் செல்ல முற்பட்ட வேளையில் திடீரென வீட்டுக்காரப் பெண் வந்து கூக்குரலிடவே தொலைக் காட்சிப் பெட்டியைக் கைவிட்டு தப்பி ஓடினான்.

இந்தச் சம்பவம் கடந்த 8ஆம் திகதி பகல் சாவகச்சேரி கல்வயல், இராமலிங்கம் வீதியில் இடம்பெற்றது.

வீட்டுக்காரப் பெண் அருகில் உள்ள கிணற்றில் குளிக்கச் சென்ற வேளையில் திருடன் வீட்டினுள் புகுந்ததாகவும் சவர்க்காரம் எடுப்பதற்காக வீட்டுக்கு வந்தபோது திருடன் நிற்பதை அவதானித்த பெண் கூக்குரலிடவே திருடன் தப்பியோடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (8-117)


## மலேசியாவில் வேலைவாய்ப்பு

மலேசியா அரசாங்கத்தில் முக்கியமான காரியாலயங்களில் உடனடியாக வேலைபெற்றுச் செல்வதற்கு 3 வருட தொழில் விசா உண்டு. பயணம் 1½ மாதத்திற்குள்

| தொழில்கள் | தொகை | வயதெல்லை |
|---|---|---|
| கட்டடக் கூலி ஆள்கள் | 500 | 20-45 |
| மேசன்மார் | 200 | 20-45 |
| தச்சுவேலை செய்பவர் | 200 | 20-45 |
| கம்பி வளைப்பவர்கள் | 200 | 20-45 |
| சுத்திகரிப்பாளர் ஆண்/பெண் | 300 | 20-35 |
| வேலைத் தள உதவியாளர்கள் | 300 | 20-35 |
| ரெயிலர் | 60 | --- |
| எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புபவர் | 400 | --- |
| வாகனம் கழுவுபவர்கள் | 200 | --- |

கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்:
சகல நாடுகளுக்கும் செல்லக்கூடிய கடவுச்சீட்டு
பாஸ்போட் அளவு படம் 15 (கலர்)
வீட்டுப் பணிப்பெண்கள் 200 பேர்
வயதெல்லை 19-45

**தொடர்பு: 0777 279813**
**மைக்கல்**

குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

(42384)(50-15-45)

## COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்
Computerized Accounting
*Accpac+Quick Books Pro+MYOB*
ஆகிய முன்னணி *Accounting Software* அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

**Course Contents**
Fundamentals of IT
Manual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation (Including VAT)
Stock Control
Bank Reconciliation
Budgeting
Fore Casting
Business Planing (C/46142)

*Tally Accounting Package*
புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றது.
இக்கற்கைநெறியின் முடிவில் வேலைகொள்வதற்கு
Audit Firm Experience தேவையில்லை!
Working Experience தேவையில்லை!

ஆரம்பம்
12/11/2005
13/11/2005 2.00pm



## Oxfam

*Oxfam GB is an International Non Governmental Organization (INGO) working with others to find lasting solutions to poverty and suffering. Oxfam has been working in Srilanka since 1986 and has been actively involved in water and sanitation provision, shelter, agriculture, gender equity and rights, food and security income and legal literacy and rights. We are currently focused on the immediate response to the thousands of people affected by the Tsunami and working towards addressing the longer-term rehabilitation needs.*

We invite applications for the post of storekeeper to our North office (Kilinochchi) with immediate effect.

**KEY RESPONSIBILITIES**
- To manage warehouse in line with Oxfam GB procedures.
- To liaise closely with Logistician on arrival and dispatch of goods.
- To ensure that the proper administrative procedures and standards for order follow up, stock keeping and dispatch are followed.
- To keep a proper record of stock related documents.
- To supervise labourers during loading and unloading of goods.
- To report monthly to Logistician regarding all logistics activities.
- To perform any other duties as assigned and requested by the line manager.

**THIS POSITION REQUIRES**
- Minimum one-year experience in similar work.
- Strong IT skills such as Excel and data base management.
- Be a team player and be prepared to work under pressure.
- Supervisory Skills.
- Good written and Spoken English.
- Record keeping and Report writing skills.
- Commitment and Enthusiasm to work.

Please send your Curriculum Vitae with a covering letter how you meet the criteria to

**HR Officer-North.**
Oxfam GB.
33, Kanagapuram. Kilinochchi.
OR
E-Mail to
hrnorth@sltnet.lk

**Women are encouraged to apply.**
**Please note that only short listed candidates will be contacted.**
Closing date of Applications: 18th of November 2005 (C/45799)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 15 - 01 - 1936



உதிர்வு 12 - 10 - 2005

**அமரர் செல்லையா நவரெத்தினம்**
(புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம்)

*மாதம் ஒன்று வந்ததய்யா மாறிடுமா எம்துயரம்*
*ஆண்டொன்று சென்றாலும் ஆறிடுமா எம் கவலை*
*எம்முடன் அருகில் நீங்கள் இல்லை ஐயா!*
*அந்தரத்தில் நிற்கின்றோம் அழைத்திட ஓடி*
*வாருங்கள் ஐயா!*
*எம் குலவிளக்கே தெய்வமே ஐயா!*
*உங்கள் ஆத்மா அமைதிபெற ஆண்டவனை*
*வேண்டுகின்றோம்.*

இன்று (11.11.2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியையைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(42627)
(21-15-45)

தகவல்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# விழிக்குத் துணை



நமது உடம்பு குகப்பெருமான் குடியிருக்கும் குகாலயம். ''உடம்பினுக்குள்ளே உறு பொருள் கண்டபின் உடம்பினை நானிருந்தோம்புகின்றேனே....'' திருமந்திரம்.

எண்சாண் உடம்பில் சிரசே பிரதானம். அந்தச் சிரசிலும் கண்ணே மிகச் சிறந்தது. நமது மற்றைய உறுப்புகள் எல்லாம் வளர்ச்சியடைகின்றன. ஆனால், கண் மட்டும் வளர்வதில்லை. ஆனாலும் அதுவே சிறந்தது. ஆகவேதான், இறைவனை ''கண்ணே! கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய்'' என்று பாடியுள்ளனர். இறைவனை மட்டுமா? அன்புக்குரியவர்களையெல்லாம் ''கண்ணே!'' என்றழைக்கின்றோம் அல்லவா? குழந்தைகளை....

நம் பார்வைக்கு ஒளியின் துணை தேவை. விஞ்ஞானத்தின்படியும் ஒளிக்கதிர்கள் பொருள்களிற் பட்டுத் தெறித்துக் கண்படலத்தின் வழி நுழைந்து விழித்திரையில் பிம்பத்தை ஏற்படுத்துகின்றது. அங்கிருந்து அது மின்காந்த அலைகள் மூலம் மூளைக்குச் சென்று பார்க்கும் பொருளின் பிரதி பிம்பத்தை மூளையிற் பதிவுசெய்து பார்க்கமுடிகின்றது. சிலரைப் பார்த்த மாத்திரத்தில் வெறுப்பு, கோபம் ஏற்படுகின்றது. இன்னும் சிலரைப் பார்க்கும்போது அன்பு, பாசம், காதல் இப்படிப்பல உணர்வுகளும் ஏற்படுகின்றன. ஏன்? ஒளி அலைகளிற் கேடு இல்லை; விழித்திரையில் தீமை இல்லை; மின் அலைகளில் இல்லை. பொருள்களின் பிம்பங்கள் ஒரே செயற்பாடாகவே நிகழ்கின்றன. ஆனால், மூளையில் ஏற்கனவே பதியப்பெற்ற தீய எண்ணங்கள் உடனடியாகச் சேர்ந்து செயற்படுகின்றபடியால் இப்பேர்ப்பட்ட விருப்பு, வெறுப்புகள் பார்வையில் ஏற்படுகின்றன.

இதைத் தவிர்க்க விழிக்கு ஆன்மீக ஒளித் துணை தேவை. அது விருப்பு, வெறுப்பு, கோபம், பொறாமை, பெருமை, சிறுமை இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது.

## ஞானக்கதிர்

ஆகவேதான், விழிகளை இறைவன் திருப்பாதங்களை நோக்கி அந்தப் பேரொளியின் கருணைத் துணை கிடைக்கவேண்டும் என்று அடியவர்கள் திருவடிகளையே கண்டார்கள்.

முருகன் பிள்ளைத்தமிழ்ப் பாடலில் ஒரு காட்சி வருகின்றது. முருகன் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை ''முழுதும் அழகிய குமர..'' என்றார் அருணகிரியார்.

நம்முள்ளே சிலருக்குச் சில அவயவங்கள் சுமாராக இருக்கும். சிலருக்கு உடம்பு வாட்ட சாட்டமாக இருக்கும். ஆனால், கழுத்தே இருக்காது. கால், கையெல்லாம்பெரிய பயில்வான் மாதிரி இருக்கும்; ஆனால், முகம் அவசரத்திற் பிடித்த கொழுக்கட்டை மாதிரி இருக்கும். இப்படிப்பல உதாரணம் சொல்லலாம். தேவர்களுக்குக்கூட ஓர் அவயவம்தான் அதி சிறந்த அழகுள்ளதாக இருக்குமாம். அழகுக்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடப்படும் தங்கள் அவயவங்கள் முருகனின் அவயவங்கள் முன் வலிமைகுன்றி நின்றதை அவர்கள் கண்டு தலைகுனிந்தனராம். வழக்கில் கூட முகத்தழகு விழிக்குத்தான் விசேடம். பேச்சு வழக்கிற் கூட '' அவள் முகத்தைப் பார் லஷ்மி மாதிரி இருக்கு'' என்று கூறுவர். அந்த இலக்குமி தேவி தான் மாமி என்பதையும் மறந்து முருகனின் முகத்தழகைத் பார்த்து இலயித்தாளாம். திருமாலுக்குத் தான் கண்ணழகு அதற்காகக் ''கண்ணன்'' என்றே சிறப்புப் பேர் பெற்றார். ''செங்கண் மால்... என்று புகழப் படுவான். தன் கண்ணழகைவிட முருகனின் கண்ணழகு உயர்ந்து துலங்குவதைஅவன் கண்டு புளகாங்கிதம் அடைந்தானாம். கலைவாணியாகிய சரஸ்வதிக்குச் சொல்லழகு. அவள் தன்னை விடஉயர்ந்த வாயழகை முருகனிடம் ஆராய்கிறாள். சிவனாருக்குச் சொற் பொருளழகு. நக்கீரனுடனேயே சொற்போர் புரிந்து திருவிளையாடல் புரிந்தவரல்லவா? தன் குமாரனின் சொற்பொருளின் அழகு தன்னை விஞ்சி நிற்பதைக் கண்டு களிபேருவகை கொள்கின்றாராம். தோள் அழகு இந்திராணிக்கு. அவள் முருகனின் பன்னிரு தோள் அழகினை ஆய்ந்து மெய்ச்சுகின்றாள்.

இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு அவயத்தினைப் பார்த்துப் பிரமித்து நிற்க, களங்கமில்லாத மனத்து அடியவர்களோ! அடியழகு கண்டார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொரு அவயவத்தைப் பற்றி நிற்கட்டும் எமக்கு அவன் மென்மையான மலர்போன்ற ஒளி பொருந்திய திருவடிகள் இரண்டும் போதுமே! என நின்றார்கள்.

ஆகவேதான், அவர்களை '' அடியவர்கள்'' என்றார்கள். ''முடியவர்கள் முகத்தவர்கள் மூக்கவர்கள் என்று கூறவில்லையே இதோ பாடல் அடியவர்கள் என்பது ஒரு பேறு.

**கமல மடமங்கை வதனத்து**
**அழகு காண்பள் - அக்**
**கரிய முகில் வண்ணனோ**
**கண்ணழகு காண்பன்**
**அரிய முக்கட் தாதையோ சொற்**
**பொருளின் அழகு காண்பர்**
**வளர் கலை வாணி**
**சொல்லழகு காண்பள்**
**வீறுதோளழகு இந்தி**
**ராணி காண்பள்**
**நிமல மன அடியர்**
**அடியழகு காண்பர்**

- என்றார். அதைத்தான் அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தின் முதல்வரியில் ''விழிக்குத் துணை திருமென் மலர்ப் பாதங்கள்'' என்று உணர்ந்து பாடினார்.

ஆகவே, எமது விழிகளின் பார்வை செம்மையாகவும் தெளிவாகவும் தூயதாகவும் அமையவேண்டுமானால் செவ்வேட் பரமரது மென்மையான மலர் போன்ற அருள் ஒளிவீசும் திருவடிகளின் துணை நமக்கு என்றென்றும் தேவை. கண்கள் பெற்ற பயன் அவரின் அழகிய கோலத்தைக் கண்டுகளித்து அதன் துணைகொண்டு உலகினைக் காண்பதே. அது என்றும் எமக்கு நன்மையே பயக்கும். **நன்றி: ஞானச்சுடர்**

# தெய்வீக ஸ்தலங்களில்



சங்கானை, குளத்தடி வீதி பேச்சியம்மன் ஆலய கும்பாபிஷேகத்தையொட்டி இடம்பெற்ற தீ மிதிப்பில் ஒரு காட்சி. *(படம்: சங்கானைச் செய்தியாளர்)*



வவுனியா மெய்கண்டார் ஆதீன குருமகா சந்நிதான ஸ்ரீலஸ்ரீ சிவக்கொழுந்து சிவதேசிக சுவாமிகளின் தீட்சை வைபவம் அண்மையில் நடைபெற்றது. சிவாச்சாரிய அபிஷேகத்தின் பின் பிரதம குரு சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டாயுதபாணி சுவாமிகள் ஆசீர்வதிப்பதைப் படத்தில் காணலாம். சிவஸ்ரீ பாலகிருஷ்ணக் குருக்கள், சிவத்திரு.ராகுலன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். *(படம்: நல்லூர்ச் செய்தியாளர்)*

# சமய தீட்சை வழங்கும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.11

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள சோமஸ்கந்தர் ஆலயத்தில் இடம்பெறும். இந்த நிகழ்வில் கரணவாய் மூத்த விநாயகர் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ செ.கைலாசநாதக் குருக்கள் கலந்துகொண்டு தீட்சை வழங்குவார். (8-14)

*** *** ***

யாழ்ப்பாணம்,நவ.11

இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையின் ஏற்பாட்டில் சமயதீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையின் பணிமனையில் காலை 8 மணிக்கு இடம் பெறவுள்ளது.

தீட்சை பெறவிரும்புவோர் அதற்குரிய ஆயத்தங்களுடன் சமுகமளிக்குமாறு நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (ஒ-14-ரி)

# அகண்ட நாம பஜனை

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் அகில உலக அகண்ட நாம பஜனை நாளை சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது. (202)

# கோப்பாய் சிறுவர், முதியோர் தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.11

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு கோப்பாய் கல்விக் கோட்ட மாணவர்களிடையே பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**சிறுவர்தினம் கட்டுரை**

**ஆரம்பப் பிரிவு**

சி.டியூறன் மொஷான் (கோப்பாய் தெற்கு றோ.க.த.க.), க.சுபேகா (ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம்), லோ. தர்சிகா (கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.).

**கனிஷ்ட இடைநிலை**

அ.அருள்பிரியா (அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி), ஞா.கஜனி (அச்சுவேலி மத்திய கல்லூரி), ம.கபிறினி (கோப்பாய் நாவலர் வித்தி.), கெ.ஆன் நிஷாநா (புனித திரேசாள் மகளிர் கல்லூரி).

**சிரேஷ்ட இடைநிலை**

ப.ஜீவிகா (ஆவரங்கால் மகாஜன வித்தி.), நா.சுஜிதரன் (கோப்பாய் சரவணபவானந்தா வித்தி.), சி.ஜனனி (அச்சுவேலி சரஸ்வதி வித்தி.).

**உயர் பிரிவு**

தி.மேனகா (அச்சுவேலி மத்திய கல்லூரி), பொ.ஸ்ரீவர்ணன் (சோமஸ்கந்தா கல்லூரி), சி.கல்பனா (அச்சுவேலி மத்திய கல்லூரி), இ.நிஷா (புனித திரேசாள் மகளிர் கல்லூரி).

**கவிதை**

**ஆரம்பப் பிரிவு**

ந.யசோதா (அத்தியார் இந்துக்கல்லூரி), ச.கோகிலா (புனித திரேசாள் மகளிர் கல்லூரி), பா.கீதாஞ்சலி (கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.).

**கனிஷ்ட இடைநிலைப் பிரிவு**

அ.மயூரி (பத்தமேனி இரட்ணேஸ்வரி வித்தி.), இ.றஜிதா (வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தி.), சி.ஜசீபா (வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தி.)

**சிரேஷ்ட பிரிவு**

விமலேந்தி (பத்தைமேனி இரட்ணேஸ்வரி வித்தி.), வி.பிரசாயினி (ஆவரங்கால் மகாஜன வித்தி.), தே.அனித்தா (பத்தைமேனி இரட்ணேஸ்வரி வித்தி.) ஸ்ரீ.நிர்தா (சோமஸ்கந்த கல்லூரி).

**உயர் பிரிவு**

வி.துஸ்யந்தி (அத்தியார் இந்துக் கல்லூரி), யோ.தீபா (புனித திரேசாள் மகளிர் கல்லூரி), அ.பிரியகாந்தி (புனித திரேசாள் மகளிர் கல்லூரி), ச.சோபிதா (அத்தியார் இந்துக் கல்லூரி).

**முதியோர் தினம் கட்டுரை**

**ஆரம்பப்பிரிவு:**

த.பைரவி (சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை), சி.ஆரணி (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.), கு.மயூரதி (சோமஸ்கந்த கல்லூரி),

**கனிஷ்ட இடைநிலைப் பிரிவு**

கு.கீர்த்திகா (அச்சுவேலி சரஸ்வதி வித்தி.), ஜெ.இராஜசிருங்காரி (ஊரெழு கணேச வித்தி.), ஷெரின் கலிஸ்ரா (புனித திரேசாள் மகளிர் கல்லூரி)

**சிரேஷ்ட பிரிவு**

வி.யாழினி (அச்சுவேலி சரஸ்வரி வித்தி.), அ.ஆர்த்திகா (ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தி.),ப.துளசி (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி.).

**உயர் பிரிவு**

கு.சுவர்ணவிழி (அச்சுவேலி மத்திய கல்லூரி), சு.மயூரா (சோமஸ்கந்த கல்லூரி), க. கலையரசி (புனித திரேசாள் மகளிர் கல்லூரி).

**கவிதை**

**ஆரம்பப் பிரிவு**

அ.மதிராஜ் (பத்தைமேனி இரட்ணேஸ்வரி வித்தி.), து.ஜென்சிகா (கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாட.), ச.கம்சிகா (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.), மா.கஜானி (சோமஸ்கந்த கல்லூரி).

**கனிஷ்ட இடைநிலைப் பிரிவு**

சி.தரணிகா (ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தி.),ஜெ.டென்சி (கோப்பாய் மகா வித்தி.), அ.சிந்து (பத்தைமேனி இரட்ணேஸ்வரி வித்தி.).

**சிரேஷ்ட பிரிவு**

யோ.தீபா (நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை), அ.துஸ்யந்தி (உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி.),ப.கயல்விழி (நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை).

**உயர் பிரிவு**

த.பிறின்சிகா (அச்சுவேலி மத்திய கல்லூரி), கு.நிஷாளினி (அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி), து.தசோனியா (அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி). (ஒ-202)

# மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.11

இம்பர்சிட்டி ஞானியார் கல்விக்கழகம் வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து இவ்வாண்டில் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 112 மாணவர்களையும் கௌரவிக்கவுள்ளது.

இக்கௌரவிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் வே.நவரத்தினராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கமலானந்தன், அல்வாய் வடமத்தி கிராம அலுவலர் க.யோகேந்திரநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-202)

# திருக்கேதீஸ்வர ஆலய நிகழ்ச்சி நிரலின் மாற்றங்கள் தொடர்பான அறிவிப்பு

திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையின் வெளியீடான பார்த்திப ஆண்டு நிகழ்ச்சி நிரலில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று ஆலயத் திருப்பணிச் சபையிலர் தெரிவித்துள்ளனர்.

அதன்படி விநாயக விரதாரம்பம் மார்கழி முதலாம் நாள் (16.12.2005) வெள்ளிக்கிழமையும் விநாயக விரத நிறைவு மார்கழி 20ஆம் நாள் (04.01.2006) புதன்கிழமையும் திருவெம்பாவை ஆரம்பம் மார்கழி 20 ஆம் நாள்(04.01.2006) புதன்கிழமையும் நடேசர் அபிசேகம் மார்கழி 28ஆம் நாள் பின்னிரவும் ஆருத்தரா தரிசனம் மார்கழி 29ஆம் நாள் (13.01.2006) வெள்ளிக்கிழமையும் நடைபெறும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னர் வெளியிடப்பட்டிருந்த நிகழ்ச்சி நிரலில் விநாயக விரதாரம்பம் கார்த்திகை முதலாம் நாள் (16.11.2005) எனவும் திருவெம்பாவை ஆரம்பம் கார்த்திகை 23ஆம் நாள் (08.12.2005) எனவும் ஆருத்திரா தரிசனம் மார்கழி 2ஆம் நாள் (17.12.2005) எனவும் விநாயக விரத நிறைவு விழா கார்த்திகை 21ஆம் நாள் (06.12.2005) எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-203)

### சாவகச்சேரி நகரசபைக்கு நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள்

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்திற்கு பத்துப்பட்டதாரிகள் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி, கூட்டுறவு அமைச்சின் செயலாளர் அ.கி. பத்மநாதன் இந்த நியமனக் கடிதங்களை வழங்கியுள்ளார். (த-117)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லலும்



தோற்றம் 02 . 05 . 1942

மறைவு 12 . 10 . 2005

### திருமதி கனகாம்பிகை பொன்னையா

ஒருமாதம் ஆயினும் ஓயாத
உம் நினைவுகளுடன்! .....
உண்ணுகிறோம் உறங்குகிறோம்!... இருளில்
அன்பெனும் ஒளியாவீரென!...
துணையின்றி தவிக்கும் விழுதானோம்
அணை தாங்கும் ஆதரவாவீரே! ...
மனத்திரையில் ஓவியமான அன்னையின் ஆத்மா
சாந்தியடைய ஆண்டவனின் கரம் தழுவுகின்றோம்

12.10.2005அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப ஒளி விளக்கான அன்புத்தாயாரின் பிரிவுச் செய்தி அறிந்து எமது உணர்வு வேதனைகளில் கலந்துகொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் பலவழிகளில் எமக்கு உதவிய அன்பு இதயங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இன்று 11.11.2005 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய பிரார்த்தனைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து எமது அன்னையின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திக்குமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

32, அத்தியடி,
யாழ்ப்பாணம். (42592) கணவர், பிள்ளைகள்.



உ
சிவமயம்

## நினைவஞ்சலி அபிஷேகமும் மாகேஸ்வர (அன்னதானம்) பூசையும்



தோற்றம் 1925 * 03 * 10

மறைவு 2005 * 10 * 14

### அமரர் எஸ்.கே.செல்லையா
(வெண்கலக் கடைச் செல்லையா)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொழும்பு மாநகரை தொழிலிடமாகவும் வரித்துக்கொண்ட அமரர் எஸ்.கே.செல்லையா (வெண்கலக் கடைச் செல்லையா) அவர்களின் நினைவஞ்சலி வழிபாட்டு அபிஷேகம் 13.11.2005 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கப்பிள்ளையார் (பன்றிக் கோட்டுப்பிள்ளையார்) ஆலயத்தில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

நினைவஞ்சலிப் பூசையைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணிக்கு மாகேஸ்வர பூசை இடம்பெறும்.

அடியார்கள், அமரரின் நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் உட்பட அனைவரையும் விசேட வழிபாட்டிலும் மாகேஸ்வரபூசையிலும் கலந்து அமரரின் ஆன்ம ஈடேற்றத்திற்குப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

413. கே.கே.எஸ். வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். - குடும்பத்தினர் -


## '3 ஏ' சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி, நவம்.11

அண்மையில் வெளியான கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களிலும் ஏ சித்தி பெற்ற தென்மராட்சிப் பிரதேச மாணவர்கள் அண்மையில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

பரீட்சை முடிவுகளின்படி அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்ற அல்லாரையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் மயூரன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்களான ஸ்ரீகரன் பரதன், கைலாசபிள்ளை பிரகாஷ், நவரத்தினம் லோஜிதா, செல்வராசா கலாவாணி, கதிர்காமத்தையன் சசிஜீவா, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவி சின்னத்துரை தமயந்தினி ஆகியோர் இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுவதேச லயன்ஸ் கழக வடக்கு மாவட்ட இணைப்பாளர் லயன் ஜே.முத்துக்குமாரசுவாமி முதன்மை விருந்தினராகவும், தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொண்டனர். (த-117)

## இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி, நவ.11

கச்சாய் பிரதேச மக்களுக்கான இலவச பரிசோதனை முகாம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கச்சாய் அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இந்த பரிசோதனை முகாமினை நடத்தவுள்ளனர்.

இந்த முகாமில் கண், நீரிழிவு, வாய்ப்புற்று, இரத்த அமுத்தம், பெண் நோயியல், பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளன. கச்சாய், அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி, கெற்பேலி, பாலாவி, மீசாலை வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை இந்தப் பரிசோதனை முகாமில் கலந்துகொள்ளுமாறு கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (த-117)




## ஏகாதசித் தீர்த்தம்

### ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானம்
நாகேஸ்வரம் - அளவெட்டி

*நாளை (12.11.2005) சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி 10 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும், தொடர்ந்து தீர்த்தமும் இடம்பெறும் என்பதை அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.*

பொ.ப. சபை.

நாகேஸ்வரம், அளவெட்டி. (42598)



## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29 . 10 . 1937

மறைவு 02 . 11 . 1995

### அமரர் பரஞ்சோதி கமலாதேவி
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
திதி 11.11.2005

பாசத்தின் முதல் உறவே - நாம்
பாரினிலே உள்ளவரை
காலமென்ன தூரமென்ன- எமை விட்டு
கலையாது உங்கள் நினைவு

"சந்திரவாசா"
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

நீங்கா நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## பதவி வெற்றிடம்

சர்வதேச தரச் சான்றிதழ் பெற்ற காப்புறுதி நிறுவனத்திற்கு பிரதேச பிரதிநிதிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

| பிரதேசம் | வெற்றிட எண்ணிக்கை | பிரதேசம் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| ★யாழ்ப்பாணம் | 12 | ★கரவெட்டி | 03 |
| ★சுன்னாகம் | 04 | ★வட்டுக்கோட்டை | 03 |
| ★மானிப்பாய் | 04 | ★வல்வெட்டித்துறை | 04 |
| ★சாவகச்சேரி | 08 | ★சுழிபுரம் | 02 |
| ★பண்டத்தரிப்பு | 03 | ★தீவகம் | 06 |

கொடுப்பனவுகள்:- ★மாதாந்தச் சம்பளம் ★தரகுப்பணம் ★மோட்டார் சைக்கிள் கடன் ★இலவசக் காப்புறுதி

தகமை:-1)வயதெல்லை 19-65 வரை (மணம் முடித்த, மணமாகாத ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.)
2)G.C.E O/L லில் கணிதம் உட்பட 06 பாடங்கள் மற்றும்G.C.E A/L.
3)காப்புறுதி அனுபவம் விரும்பத்தக்கது.

விண்ணப்ப முடிவுத்திகதி 16.11.2005

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
விளம்பர இலக்கம் 2745, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.



## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 17.04.1974

தாயக மடியில் 11.11.2001

காணாத தொலைவிற்குள்
கண்ணுறங்கும் சோதரனே!
வீணாகப் போகாது
உந்தனது கனவுகளே
பருதி உன் நினைவுகளை
ஆறாமல் சுமக்கின்றோம்
ஓராண்டாய் சேமித்த
கண்ணீர்ப்பூ சொரிகின்றோம்.

இந்நாளில் இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப். கேணல் சிவனேசன், கப்டன் தூயோன், ரூபன் ஆகியோரையும் நினைவு கூருகின்றோம்.

### கப்டன் பருதியப்பன்
(செல்லப்பா சிவகுமார்)

திதி: 28.10.2005

பலாலி கிழக்கு,
பலாலி.

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

# ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்து! இன விடுதலைக்கு வலுச்சேர்ப்போம்!

## தீவக விழிப்புணர்வுக் கழகம் ஈழத்தமிழருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,நவ.11

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரித்து தமிழின விடுதலைக்கு வலுச்சேர்ப்போம்.

- இவ்வாறு தீவக விழிப்புணர்வுக் கழகம் ஈழத்தமிழர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதற்காக விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழர்களுக்குத் தாயகம் என்று ஒன்றில்லை. சுயநிர்ணய உரிமை கிடையாது யுத்தநிறுத்த உடன்படிக்கை மீளாய்வு செய்யப்படவேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேயைப் புறந்தள்ள வேண்டும் என்று வெளிப்படையாகவே இனவாதத்தைக் கக்கிவருகிறார். அத்துடன், தான் சிங்கள - பௌத்த மக்களின் காவலன் என்றும் கூறிவருகிறார். அத்துடன், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்கான மறைமுக நிகழ்ச்சி நிரல் ஒன்றையும் கொண்டிருக்கிறார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க. இவர் காலத்தை இழுத்தடித்து சர்வதேச வலைப்பின்னல் ஊடாகத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்க முனைந்தவர். இந்தியாவுடனும், அமெரிக்காவுடனும் பாதுகாப்பு உடன்படிக்கைகள் செய்யப் பகீரதப் பிரயத்தனம் செய்தவர். தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான அவசரகாலச் சட்டத்திற்கு ஒத்துழைத்து பல இளைஞர்கள் கைதுசெய்யப்படவும் காணாமற்போகவும் காரணமாக இருந்தவர்.

ஆகவே, இந்தத் தேர்தலானது சிறிலங்காவிற்கும் சிங்கள மக்களுக்குமான ஓர் அதிகாரமிக்க தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு தேர்தலாகும். இத்தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் தமிழ்மக்கள் எந்தப் பயனையும் அடையப்போவதில்லை. ஆனால், இந்தத் தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணிப்பதன் மூலம் பல நன்மைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. தமிழ் மக்களின் அபிலாஷைகளை எந்தவொரு சிங்களத் தலைவரும் நிறைவேற்ற மாட்டார்கள் என்பதையும் எவர்மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை என்பதையும் இதன்மூலம் சர்வதேசத்திற்கு எடுத்துக்கூறமுடியும்.

எனவே, தமிழ்மக்கள் அனைவரும் இந்தத் தேர்தலைப் புறக்கணித்து இனத்தின் விடுதலைக்கு வலுச்சேர்ப்பதே சரியான முடிவாகும் - என்றுள்ளது. (ஓ)

# சிங்களத் தலைமைகளின் பசப்புவார்த்தைக்குத் தமிழினம் இனியும் ஏமாறத் தயாரில்லை

## வலி.பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.11

சிங்களத் தலைமைகளின் பசப்புவார்த்தைகளைக் கேட்டு ஏமாற ஈழத் தமிழினம் இனியும் தயாரில்லை என்று வலிகாமம் கோட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சிங்கள் தேசத்திற்கான பேரினவாதத் தலைவர் ஒருவரைத் தேர்வுசெய்யும் தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் கட்டாயம் பங்களிக்க வேண்டுமென எதிர்பார்ப்பவர்கள் கடந்தகால வரலாற்றைத் தெரியாதவர்களாவர். அதனைச் சரியாகத் தெரிந்தவர்கள் தமிழ்பேசும் மக்கள் தேர்தலில் வாக்களிக்காது விடுவதே புத்தி சாதுரியமென ஏற்றுக்கொள்வர்.

இத்தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் இருவருமே சிங்களப் பேரினவாதச் சிந்தனை கொண்டவர்களாகவே தம்மை இனம் காட்டியுள்ளனர். அதனையே தமது விஞ்ஞாபனங்களிலும் வெளிக்காட்டியுள்ளனர். தவிர, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தெளிவான தீர்வை அவர்கள் முன்வைக்கவுமில்லை. அதற்கு ஒத்திசைவான விடயங்கள் குறித்துச் சுட்டிகாட்டவுமில்லை. தமிழர்களுடைய பிரச்சினையை தமது வெற்றிக்குப் பயன்படுத்தும் கருவியாக முன்வைத்து பொருத்தமற்ற கருத்துகளைக் கூறிவருகின்றனர். இப்படியான பசப்புவார்த்தைகளைக் கேட்டு இனியும் தமிழ் மக்கள் ஏமாறமாட்டார்கள். தமக்கான ஒரு தனி அரசை அமைக்க அவர்கள் உழைத்தும் வருகின்றார்கள்.

ஆட்சி அதிகாரத்திற்காகப் போட்டி இட்டாலும் எம்மைத் துன்புறுத்தும், அழிக்கும் அவசரகாலச் சட்டத்திற்கும் ஒத்துழைப்பு வழங்கிவருவதன் மூலம் இந்த வேட்பாளர்களின் சுயரூபத்தை நாம் அறியக்கூடியதாகவுள்ளது.

இத்தேர்தலில் வாக்களிப்பதால் எமக்கு எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை. இத்தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் சிங்கள தலைமைகள் மீது நாம் கொண்டுள்ள அவநம்பிக்கையை சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்படுத்த முடியும். எனவே, இந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழ் பேசும் மக்கள் புறக்கணித்து எமது விடுதலைக்கு உரம் சேர்த்துக்கொள்ள உதவும்படி கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஓ)





யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கடந்த மாதம் இந்து தர்மாசிரியர் கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் சிவசாமி மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் இந்து கலாசார அமைச்சின் யாழ். பிராந்திய மாவட்ட இணைப்பாளர் க.நாகராசா நிற்பதையும் முதல் படத்திலும் கருத்தரங்கில் பங்குபற்றிய தர்மாசிரியர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# யாழ். மக்களின் சேமிப்புப் பழக்கம் அவர்கள் வாழ்வைச் சிறப்பானதாக்கும்

## தேசிய சேமிப்பு வங்கி அதிகாரி பாராட்டு

யாழ்ப்பாணம்,நவ.11

யாழ்ப்பாண மக்கள் தங்களுடைய எதிர்காலத்தைத் திட்டமிட்டுச் சேமிப்புப் பழக்கத்தில் ஈடுபடுகின்றனர். இதனால், அவர்களுடைய எதிர்கால வாழ்வு மிகவும் சிறப்பானதாக அமையும்.

- இவ்வாறு தெரிவித்தார் இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின் செயற்பாட்டு உதவிப் பொதுமுகாமையாளர் திருமதி குசும் அமரதுங்க.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாணக் கிளைக்கான புதிய இரண்டு மாடிக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:-

யாழ். மக்கள் தமது எதிர்காலத் தேவைகளை அறிந்து திட்டமிட்ட சேமிப்பில் ஈடுபடுவதில் மிகவும் ஆர்வம் உடையவர்கள்.

இந்த மக்கள் பெரும் தொகையான பணத்தைத் தேசிய சேமிப்பு வங்கியில் சேமித்துள்ளனர் என்பது பெருமையளிக்கிறது.

அத்துடன், யாழ்ப்பாணக் கிளையில் பணியாற்றும் ஊழியர்களின் கடும் உழைப்பினால் இந்த வங்கிப் பணிகள் தரம் உயர்ந்துள்ளன. இவர்களின் தூரநோக்கம் கொண்ட சிந்தனையால்தான் இன்று யாழ். நகரில் இரண்டு மாடிகளைக் கொண்ட புதிய கட்டடம் நிமிர்ந்து நிற்கின்றது.

சேமிப்பு வங்கியின் இயக்குநர் சபையின் முழு முயற்சியால் இக்கட்டடம் குறுகிய காலத்தில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வங்கியின் முன்னேற்றம் வங்கி ஊழியர்கள் ஒவ்வொருவரதும் கைகளிலேயே தங்கியுள்ளது. அந்தவகையில் இந்தக் கிளை மேலும் வளர்ச்சியடையும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

எதிர்காலத்தில் இந்த வங்கி மிகத் துரித வளர்ச்சிகண்டு, மக்களுக்குரிய சேவைகளை உரியமுறையில் செய்து தலைநிமிர்ந்து நிற்கும் என நான் நம்புகின்றேன் - என்றார்.

முன்னதாக பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் செயற்பாட்டு உதவிப் பொது முகாமையாளர் திருமதி குசும் அமரதுங்க சுபநேரத்தில் யாழ். கிளையின் புதிய கட்டடத்தை நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து வங்கியில் புதிய கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் முதலாவதாக யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய பணத்தை வைப்பிலிட பிரதம விருந்தினர் திருமதி குசும் அமதுரங்க அதனைப் பெற்றுக்கொண்டார்.

இந்தக் கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.(ஓ-7-203)



திறப்பு விழாவன்று வங்கியில் முதலாவது கணக்கை யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய வைப்புச் செய்வதையும் அதனைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி குசும் அமரசிங்க பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம்.

(07-11-2005 ஆம் திகதிய உதயனில் வெளியான மற்றொரு படத்தில் டாக் டர் ம.சிவசூரியா என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது.)

### வேலணையில் மலசலகூடம் அமைக்க நிதி உதவி

வேலணை,நவ.11

வேலணை பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜே/14, ஜே/15 ஆகிய கிராம அலுவலர்கள் பிரிவுகளில் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனம் 20 மலசலகூடங்களை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

ஒவ்வொரு மலசலகூடம் அமைப்பதற்கும் 70 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும்.

இதில் 60 ஆயிரத்து 650 ரூபாவை அந்த நிறுவனம் வழங்கும். எஞ்சிய பணிக்குப் பயனாளிகள் தமது பங்களிப்பை வழங்க வேண்டும்.

இத்திட்டத்தின் ஆரம்பகட்டமாக ஒவ்வொரு பயனாளிக்கும் 30 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. வேலை முன்னேற்றம் மதிப்பிடப்பட்டு எஞ்சிய தொகை வழங்கப்படும்.

வறியகுடும்பங்களின் சுகாதார நிலையை மேம்படுத்தும் நோக்குடன் வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலனின் முயற்சியால் இந்த மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன என்று இந்தப் பிரிவுக்குப் பொறுப்பான கிராம அலுவலர்களான சி.இ.கா.சிவஞானம், நா.கந்தசாமி ஆகியோர் தெரிவித்தனர். (3-167-204)

### சுழிபுரம் தபாலகத்தில் தந்திச்சேவை

சுழிபுரம்,நவ.11

சுழிபுரம் தபாலகத்துக்கு இம்மாதம் முதல் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அங்கு தந்திச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகத் தபால் தந்திச் சேவையை ஆரம்பிக்குமாறு இப்பகுதிப் பொது அமைப்புகள் கோரிவந்தன.

இம்மாதம் முதல் தந்திச் சேவையும் அதனோடு தொடர்புடைய பிற கருமங்களும் இத் தபாலகத்தில் இடம்பெற்றுவருகின்றன.(ஓ-28)

### வாண்மை விருத்தி தின நிகழ்வு

தென்மராட்சி,நவ.11

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தித் தினம் அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகக் கல்வியியல் துறைத் தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பியும் சிறப்பு விருந்தினராக முன்னாள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும் கலந்துகொண்டனர். (ஓ-31-117)

# SAAMSTECH இன் ஆங்கிலம்

## எழுத, வாசிக்க, கதைக்க, புரிந்துகொள்ள மூன்றே மாதத்தில் முழுமையான ஆங்கிலம்

♦ அடிப்படைக்கட்டமைப்புக்கள் மூலம் வசன உருவாக்க வேகம் ♦ விருத்தியாக்க படிமுறைமூலம் பெரிய வசனங்கள் ♦ ஒலிப்பயிற்சி மூலமான கிரகித்தல்
♦ பழக்கப்படுத்தல் மூலம் சொல்வள விருத்தியாக்கம் ♦ பிரயோகங்கள் மூலம் தொடர்ச்சியான கதைத்தல் ♦ உரையாடல் மூலமான தேர்ச்சி

**தினம் தினம் அமெரிக்கா மற்றும் லண்டனில் இருந்து தருவிக்கப்படும் ஒலிப்பயிற்சிகளுடன்.................**

இப்பயிற்சிமூலமாக சிறியவர்களால்க்கூட சில நாட்களிலேயே ஏராளமான வசனங்களை வேகமாக உருவாக்கிக் கதைக்க முடியும்

**அனேகரின் விருப்பத்திற்கிணங்க............**

**இன்றும் நாளையும் ரூபா 3600/- பெறுமதியான புத்தகங்கள், CD என்பன இலவசம்**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

# மாபெரும் சலுகை

### அலுவலர்களுக்கான பிரிவு

ஆசிரியர்கள், வங்கியாளர்கள், விரிவுரையாளர்கள், கணக்காளர்கள், நிர்வாகிகள், பொது அலுவலர்கள், ஆய்வாளர்கள், தாதிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், மற்றும் ஊழியர்கள்.

கட்டணம் ரூபா 3000/-

இன்று அல்லது நாளை பதிவுசெய்வோருக்கு 3600/- ரூபாய்க்கான புத்தகங்கள், CD இலவசம்

### பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்களுக்கானது

கட்டணம் ரூபா 3000/-

இன்று அல்லது நாளை பதிவுசெய்வோருக்கு 3600/- ரூபாய்க்கான புத்தகங்கள் மற்றும் CD இலவசம்

### வீட்டுப்பெண்களுக்கான பிரிவுகள்

கட்டணம் ரூபா 3000/-

இன்று அல்லது நாளை பதிவுசெய்வோருக்கு 3600/- ரூபாய்க்கான புத்தகங்கள் மற்றும் CD இலவசம்

### இளைஞர் மற்றும் யுவதிகளுக்கானது

கட்டணம் ரூபா 3000/-

இன்று அல்லது நாளை பதிவுசெய்வோருக்கு 3600/- ரூபாய்க்கான புத்தகங்கள் மற்றும் CD இலவசம்

### மாணவர்களுக்கானது

7 முதல் 10, 11 முதல் 13 ம் வகுப்புகளுக்கு இரு பிரிவாக தனித்தனி வகுப்புக்கள்

கட்டணம் ரூபா 3000/-

இன்று அல்லது நாளை பதிவுசெய்வோருக்கு 3600/- ரூபாய்க்கான புத்தகங்கள் மற்றும் CD இலவசம்

ஒவ்வொரு பிரிவுக்கும் காலை, மாலை கிழமை மற்றும் சனி,ஞாயிறு வகுப்புக்கள் உண்டு. விரும்பிய வகுப்பில் பதிவுசெய்யலாம்
ஒவ்வொரு வகுப்பிலும் 30 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

**இன்றும் நாளையும் வகுப்புக்கு புதிதாகப் பதிவுசெய்பவர்களுக்கே ரூபா 3600/- பெறுமதியான புத்தகங்கள், CD என்பன இலவசம்**

# TEACHERS TRAINING PROGRAM

## பயிற்சியும் பணிநியமனமும்

கீழ்வரும் திணைக்களப்பணியிடங்களுக்கான 8ஆம் 9ஆம் பிரிவு கிழமை மற்றும் சனி ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்

❑ Administration ❑ Teaching ❑ Web ❑ English ❑ General Knowledge ❑ Computing ❑ Minnal
❑ Quiz Portal ❑ Learning Activity Development ❑ Multimedia ❑ Jffna Directory ❑ Marketing
❑ Advertising ❑ Graphics ❑ Planning ❑ Management ❑ General Work ❑ Others

கல்வித்தகுதி : க.பொ.த உயர்தரம் கட்டணம் : ரூபா 12000/-

பயிற்சியின்போது சொல்வளபயிற்சிக்கான 200 பக்க மொழிமாற்றப்பணிக்கு ரூபா 6000/- ஊதியம் வழங்கப்படும்.

அனுமதிக்கு இன்று (11.11.2005) அல்லது நாளை (12.11.2005) சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்

வகுப்பில் 48 பேரே சேர்த்துக்கொள்ளப்பட உள்ளதால் முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலேயே அனுமதி வழங்கப்படும்

# SAAMSTECH

841, Hospital Road, Jaffna. Ph : 4591571
233/4, Kasthuriyar Road, Jaffna. Ph : 2229505

# காலபோகச் செய்கை மண்டைதீவில் இல்லை; கடற்படையினர் விதித்த புதிய நிபந்தனையால்!

மண்டைதீவு,நவ.11

மண்டைதீவு விவசாயிகள் தங்களது வயல் நிலங்களில் இந்த வருடமும் காலபோக நெற்செய்கையில் ஈடுபடவில்லை. காலபோகச் செய்கைக்கு ஏற்ற புறச்சூழ் நிலை அங்கு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதி விவசாயிகள் 1991ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் தங்களது வயல்களில் நெல் விதைத்த கையோடு அங்கு ஏற்பட்ட யுத்தத்தினால் முற்றாக இடம்பெயர்ந்தனர்.

அந்தக் காலம் தொடக்கம் இன்று வரை வயல் நிலங்கள் மண்டிப் போய்க் கிடக்கின்றன.

இந்த வயல் நிலங்களைத் திருத்துவதற்கு பெருமளவு நிதி தேவைப்படுகிறது. அத்துடன் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளிடமிருந்து பயிரைப் பாதுகாப்பதற்கு பலமான வேலிகளையும் அமைக்கவேண்டியுள்ளது.

கடற்படையினரிடம் அனுமதி பெற்றே நெற்செய்கையில் ஈடுபடவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது. எனவே, கடற்படை அதிகாரிகளிடம் இதற்கான அனுமதி பெறுவது குறித்து விவசாயிகள் தொடர்பு கொண்டனர்.

ஆனால், பயிர்ச்செய்கைக்கு முழு நிலப் பகுதிகளையும் விடமுடியாது. வேண்டுமானால் குறித்த ஒருபகுதியில் அனுமதிக்கலாம். அந்தப் பகுதி எது என்பதை விவசாயிகள் தெரிவுசெய்யட்டும் என்று கடற்படையினர் நிபந்தனை விதித்துவிட்டனர்.

மாதாந்தம் நடைபெறும் பொதுமக்கள், பொதுசனத் தொடர்பதிகாரி மற்றும் அந்தப் பகுதியின் கடற்படை அதிகாரிகள் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டத்திலேயே கடற்படையினர் இந்த நிபந்தனையை விதித்தனர்.

விவசாயிகளால் குறித்து ஒதுக்கப்படும் ஒரு பகுதிக் காணியில் பயிர்ச்செய்கைக்கு அனுமதிப்பதுடன் அப்பகுதியைச் சுற்றி வேலி அமைப்பதற்கு முட்கம்பிகளையும் தருகிறோம் என்று கடற்படை அதிகாரி சொன்னார்.

எனினும், வேலி அமைப்பது ஒருபுறமிருக்க ஒரு பகுதி காணியிலேயே பயிர்ச்செய்கைக்கு அனுமதிக்கமுடியும் என்று கடற்படையினர் விதித்த நிபந்தனையினால் விவசாயிகள் குழப்பமும் விசனமும் அடைந்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

குறித்தொதுக்கப்படும் ஒரு பகுதியில் மீளக்குடியேறிய பலரின் வயற்காணிகள் உள்ளடங்காமல் போய்விடும். அதேநேரம் மீளக்குடியமராதவர்கள் பலரின் காணிகள் அந்தத் தொகுதிக்குள் உள்ளடங்கி விடும்.

விவசாயிகள் தமது சொந்த வயற்காணி வேறு எங்கோ இருக்க, வேறு ஒருவருக்குச் சொந்தமான நிலத்தை அதிக செலவில் திருத்திப் பயிரிடுவதை விரும்பவில்லை.

இந்தக் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த நீர்த்தடுப்பு அணைகள் யுத்த சூழ்நிலையால் அழிந்துபோய் உள்ளன என்றும் -

அதனால் பருவகால மழைநீர் நீண்ட காலமாக தூர் எடுக்கப்படாத கிராஞ்சிக்குளம், சம்புக்குளம், அம்மன் கோயில் பகுதிக்குளம் என்பவற்றில் இருந்து விரைவாக கடலுக்குச் சென்றுவிடுவதாகவும் சொல்லப்பட்டது.

வெள்ளைக் கடல், உப்புவெளி போன்ற தாழ்ந்த நிலப்பகுதிகளிலும் மழைநீர் தேங்கி நில்லாது வடிந்துவிடுவதாகவும் இந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்படியான பல்வேறு காரணங்களினால் மண்டைதீவுப் பகுதியில் இம்முறையும் நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் திணைக்களங்களும் இந்தவிடயத்தில் தலையிட்டு இனிமேலாவது இப்பகுதி விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-88)

## கிராம அலுவலர்களுக்கு இருநாள் பயிற்சி

வலி.தெற்கு,நவ.11

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கிராம சேவை அலுவலர்களுக்கு அவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்காக இரண்டு நாள் பயிற்சியொன்று இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சிகள் பகுதி பகுதியாக இடம்பெறும்.

கிராம சேவை அலுவலர்களுக்கான இப் பயிற்சியினை மனிதவள அபிவிருத்தி உதவி மாவட்ட செயலாளர் ஒழுங்குபடுத்தி வருகின்றார்.

(த-152)

## 'உளவியல் சிந்தனைகள்' நூல் வெளியீட்டு விழா

வலி.தெற்கு,நவ.11

டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் எழுதிய 'உளவியற் சிந்தனைகள்' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வட்டுக்கோட்டை தெற்கு திருஞானசம்பந்தர் வீதியில் அமைந்துள்ள மூலிகை சுகவாழ்வு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைத் தலைவர் கலாநிதி வ.கந்தசாமி இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைப்பார்.

(த-152)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## நவாலி கொத்துக்கட்டி மயானத்தில் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் மடம்

நவாலி,நவ.11

நவாலி கொத்துக்கட்டி இந்துமயானத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பாரிய மடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மயானத்திற்குத் தகனக்கிரியைகள் செய்யச் செல்லும் மக்களின் நன்மை கருதி மானிப்பாய் பிரதேச சபையினரால் இந்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மயானத்தில் கிரியைகள் செய்யச் செல்பவர்கள் நிழல்தரும் மரங்கள் கூட இல்லாமல் நீண்ட காலமாக வெயிலிலும் மழையிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்த அவலநிலையை போக்குமாறு கோரி நவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்டவர்களுக்கு மகஜர்களை அனுப்பிவைத்தது. இதனையடுத்தே இந்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திலும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் மடம் ஒன்றை அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(த-100-203)

## குளங்களுக்குள் குப்பைகள் கொட்டப்படுவதாகப் புகார்!

வலி.தெற்கு,நவ.11

அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்ட வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசத்தில் உள்ள குளங்களில் குப்பை கூழங்கள் கொட்டப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

'நியாப்' திட்டம் இரண்டின் கீழ் மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தால் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட மானிப்பாய் கிராய்குளம், முதலியார் குளம் என்பவற்றில் பொறுப்பற்ற முறையில் பலராலும் கழிவுப்பொருள்கள் கொட்டப்படுவதாக மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மழைக்காலம் ஆரம்பித்துள்ள நிலையில் குளங்களில் நீர் தேங்கி வருகின்றது. இந்த நிலையில் குளங்களில் கழிவுகள் கொட்டப்படுவதால் குளத்துநீர் மாசடைகின்றது. இதனால், விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. வயல் நிலங்களில் முளைத்துள்ள பயிர்களுக்கும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. எனவே, குளங்களில் கழிவுகளைக் கொட்ட வேண்டாம் என்று கேட்கப்பட்டுள்ளது.

தற்போது வழுக்கியாறு பிரதான வாய்க்கால் ஊடாக மழை வெள்ளம் பாய்ந்து சென்று கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் வாய்க்கால்கள், குளங்களில் கொட்டப் படும் கழிவுகளால் நீரோட்டம் தடைப்படவும் பயிர்கள் பாதிப்படையவும் வாய்ப்புகள் உள்ளன. என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

(த-152)








'போரூட்' நிறுவனத்தின் 'சக்தி' அமைப்பினரால் கடந்த மூன்றாம் திகதி மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடத்தப்பட்ட சர்வதேச நல்லொழுக்கதின நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. 'போரூட்' யாழ்.மேற்குத் திட்ட இணைப்பாளர் அ.டெனி மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத் தில் காணலாம். அருகில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் செ.கதிர்காமத்தம்பியும் காணப்படுகின்றார். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் 'சக்தி' சஞ்சிகையை வெளியிட்டு வைப்பதை இரண்டாவது படத்திலும் 'போரூட்' நிறுவனம் மற்றும் 'சக்தி' அமைப்பு உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள் ஆகியோரை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## மருதனார்மடத்தில் விஞ்ஞானதின விழா

உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலய விஞ்ஞான ஆசிரியர் சங்கம் நடத்தும் விஞ்ஞான தின விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி பிரதி அதிபரும் விஞ்ஞான பாட ஆசிரியருமான க.ஜோர்ஜ் தலைமையில் விழா நடைபெறும்.

வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். வலிகாமம் வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.விஜேந்திரசர்மா கௌரவ விருந்தினராக கலந்துகொள்வார்.

கோட்டக் கல்விப் பணிப்பாளரான செ.குபேரநாதன் (உடுவில்), செ.கைலாசநாதன் (தெல்லிப்பழை), க.தனபாலசிங்கம் (சண்டிலிப்பாய்), நா.சண்முகசுந்தரம் (சங்கானை) ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வார்கள்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கணனி விஞ்ஞானத்துறைப் பேராசிரியர் கலாநிதி சி.மகேசன் ''விஞ்ஞானத்தின் இன்றைய போக்கு'' என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

விஞ்ஞான பாடத்தை சிறப்பாக முன்னெடுத்த விஞ்ஞான ஆசிரியர்கள் சிலர் இவ் விழாவில் வைத்து கௌரவிக்கப்பட உள்ள னர்.

கடந்த ஆசிரியர் தினத்தன்று வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதி விருது பெற்ற வலிகாமம் வலய விஞ்ஞானபாட ஆசிரிய ஆலோசகர் பொ.நாகரட்ணம் மற்றும் விஞ்ஞானபாட ஆசிரியர்களான குட்டிப்புலம் வித்தியாலய ஆசிரியர் எஸ்.கணேசகுமார், மூளாய் சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் சி.சிவமலர் ஆகியோரும் பாராட்டுப் பெறவுள்ளனர்.

(த-152)

## 'எய்ட்ஸ்' தினத்தை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

குருநகர்,நவ.11

எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி உலக 'எய்ட்ஸ்' தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இந்த 'எய்ட்ஸ்' தினத்தையொட்டி பாடசாலை மாணவர் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்கும் நோக்குடன் யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்கள் மட்டத்திலான கட்டுரை,ஓவியப் போட்டிகளை நடத்துவதற்கு யாழ்.மாவட்ட 'எய்ட்ஸ்' தடுப்புக் குழு தீர்மானித்துள்ளது.

யாழ்.மாவட்ட யு.என்.எச்.சி.ஆர். அனுசரணையுடன் நடைபெறவுள்ள இக்கட்டுரை, ஓவியப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள மாணவர்கள் தமது ஆக்கங்களை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலை அதிபர்கள்,வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கட்டுரை, ஓவியப்போட்டிகள் ஜி.சீ.ஈ. சதாரண, ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்கள் கலந்துகொள்ளக்கூடியதாக இரு பிரிவுகளில் நடைபெறும் சாதாரணதர மாணவர்கள் 'எய்ட்ஸ் நோய்த்தடுப்பில் இளைஞர்களின் பங்கு' எனும் தலைப்பில் 300 சொற்களுக்குக் குறையாமலும் உயர்தர மாணவர்கள் 'புதுயுகத்திற்கு எய்ட்ஸ் ஒரு சவால்' எனும் தலைப்பில் 400 சொற்களுக்குக் குறையாமல் எழுதி தமது ஆக்கங்களை அனுப்பவேண்டும்.

ஓவியப்போட்டி சாதாரண, உயர்தர மாணவர்கள் இணைந்து ஒரு பிரிவாக நடத்தப்படும் 'எய்ட்ஸ்' நோயைத் தடுப்போம்' எனும் தலைப்பைக் கொண்டு தமது கற்பனை ஓவியங்களை 'ஏ3' பேப்பரில் வரைந்து அனுப்பவேண்டும்.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பெறுமதியான பரிசுகளும் மற்றும் 10 பேருக்கு ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-51)

## திருடர்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம்,நவ.11

இருபாலைப் பகுதியில் கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து இடம்பெற்று வந்த திருட்டுகளுக்கு உடைந்தையானவர்களாக இருக்கலாம் எனக் கருதப்படும் இருவர் கடந்த இரு நாள்களுக்கு முன் ஒரு திருட்டுச் சம்பவத்தின் போது அவ்வூர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை 3 மணிக்கு வீடொன்றினுள் நுழைந்த இவ்விருவரும் அந்த வீட்டினுள் தேடுதலில் ஈடுபட்டிருந்தவேளை, அரவம் கேட்டு விழித்த வீட்டுக்காரரினால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர்.

நித்திரையில் இருந்து விழித்த வீட்டுக்காரர் ஆள் நடமாட்டத்தைத் தெரிந்து கொண்டு கூக்குரலிட்டதை அடுத்து விழித்துக்கொண்ட ஊர்மக்கள் அங்கு திரண்டு திருடர்கள் எனக் கருதப்படும் அவ்விருவரையும் பிடிக்க உதவினர். பிடிபட்ட இருவரும் அன்று காலை பொது மக்கள் பார்க்கும் விதத்தில் கட்டிவைக்கப் பட்டனர். (த-15)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### சேவை

55000 அமெரிக்க விசா லொத்தர் ( **Green card)** விண்ணப்பங்கள் தற்போது அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரியவாய்ப்பு. இலவச விண்ணப்ப விவரத்திற்குத் தாமதிக்காமல் தொடர்பு கொள்க. முடிவு திகதி 05.12.2005. உங்களது விண்ணப்பங்களை அமெரிக்காவிற்கு **Internet** மூலம் அனுப்பி அமெரிக்க றிசீட் அனுப்பி வைப்போம். **Penquin Bookshop, B2/F23, Bloemendhal Flats, Colombo-13. T.P.: 0773081764 .**

(சி-46105)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1964, அத்தம், செவ்வாய்க்குற்றமற்ற, யாழ்.பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: விள.இல 2746, மே/பா உதயன். (42603)

### தவறிவிட்டது

சின்னராஜா ஜெயபாலன் என்பவருடைய வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் 09-11-2005 அன்று திருநெல்வேலி சந்தைக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பழங்கிணற்றடி பிள்ளையார் கோயிலடி, கலாசாலைவீதி, திருநெல்வேலி என்னும் முகவரியுடனோ அல்லது தொ.பே.0777162935 எனும் இலக்கத்துடனோ தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(42631)

### தவறிவிட்டது

S பவானந்தன் என்பவருடைய வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் 15-10-2005 அன்று யாழ்.நகரிற்கும் மானிப்பாயிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0777563659 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (42629)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து





சங்கானை மேற்கைச் சேர்ந்த சிறிதரன் - சத்தியமதி தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**சைதன்யன்**

முதலாவது பிறந்த நாளை இன்று (*11.11.2005*) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அக்கா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, சத்தி மாமா, சுதாஅத்தை,

செல்வன் சைதன்யன்

தீசன் பெரியப்பா, றசிப் பெரியம்மா,கரன் சித்தப்பா, சாந்திச் சித்தி, ஜெகன் சித்தப்பா, முரளி மாமா, தேவகி அத்தை ஆகியோர் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

**மாமா சத்தியேந்திரா**
**நிற்சாமம்,**
**சங்கானை மேற்கு.**

(42630) (24-26-11-17)

## மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



50 ஆவது அகவைகாணும்
அருட்கலாநிதி
**D.S.தியாகராசா**
(B.D,S.T.M, Dip. in German Studies. P.hD)

அவர்களை மனம் மகிழ்ந்து பாராட்டி நெடுந்தீவு வாழ் மக்களின் கல்வி வளர்ச்சிக்கும், இறை பணிக்கும் நல் ஊக்கம் தந்து, இன்றுவரை எம்மோடும் எம்மக்களுக்காவும் அரும்பணி ஆற்றிவரும் இவரை நீடூழிவாழ இயேசு பிரானை ஆசித்து நிற்கின்றோம்.

நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை சமூகம், இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், நெடுந்தீவுப் பிரிவு-தேசிய எழுச்சிப் பேரவை, நெடுந்தீவு பிரதேச நெடு வாழ் மக்கள்.

(42642)(26-11-17)

## வெளிவாரி பரீட்சைகள்


யாழ்ப்பாணம், நவ.11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகின் பொதுக்கலைமாணித் தேர்வுபகுதி II 2002, சிறப்புக்கலைமாணித் தேர்வு பகுதி II 2002ஆகிய பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட் கிழமை தொடக்கம் யாழ்.பல்கலைக்கழகத்தில் மேற்படி பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பரீட்சைகள் அலகில் பெற்றுக் கொள்ளலாம் என்றுள்ளது. (202)

## கிளிநொச்சியில் உயர்கற்கை நெறியை கற்றுக் கொள்ள அரிய வாய்ப்பு ....



கல்வி, தொழில் வாய்ப்புக்களுக்காக பிற மாவட்டங்களுக்கு அலையத் தேவையில்லை....
உங்கள் அருகில் உயர் கற்கைநெறிகள் ....
தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முகாமைத்துவ கல்லூரியினால் **G.A.Q (B.A.), B.Com.** கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன....

2004இல் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் இதற்கு முன்னைய ஆண்டுகளில் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் 20.11.2005 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவேண்டும்.
கற்கை நெறிகள் சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் மட்டுமே நடைபெறும்.
கற்கை நெறிகளிற்கு மட்டுப்படுத்தப்பட்டவர்களே சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதால் மேலதிக விவரங்களிற்கும், விண்ணப்பப்படிவங்களிற்கும் முன்கூட்டியே முகாமைத்துவ கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

(சி/46166)

**நிர்வாகம், முகாமைத்துவ கல்லூரி,**
**கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.**

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 - 05 - 1921



உதிர்வு 06 - 11 - 2000

### அமரர் இளையதம்பி நாகலிங்கம் கந்தையா

(E.N.K *நாரந்தனை கிழக்கு*)
*திதி: 11-11-2005 தசமி*

நிலையில்லா இவ்வுலகத்திலே
நீங்காத நினைவை மட்டும்
எமக்குத் தந்து விட்டுச் சென்று
ஐந்தாண்டுகள் நிறைவுறும் வேளையிலே
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**55 A, அரசடி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

*(42639)(26-11-17)*

## வீதி வடிகால்கள் அதிகசேதம்

கரவெட்டி, நவ.11

கரவெட்டி பிரதேச வீதிவடிகால்கள் சேதமடைந்துள்ளன. இதனால் வீதிகளில் தற்போது பெய்து வரும் மழை நீர் தேங்கி உள்ளது. பொதுமக்கள் அவ்வீதிகளால் செல்ல முடியாதுள்ளனர். நெல்லியடி மகாத்மா வீதி, கொடிகாமம் வீதி ஆகியவற்றில் வெள்ளம் தேங்குகிறது.

மேலும் மதகு, வடிகால்கள் திருத்தம் செய்யப்படாமையால் யாழ்.வீதியின் பல இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது.

(ஒ-70)

## UNIVERSITY OF MADRAS

### சென்னை பல்கலைக்கழகம்

### INSTITUTE OF DISTANCE EDUCATION

Estd in 1856

தேசிய தரமதிப்பீட்டு குழுவால் ஐந்து நட்சத்திர தகுதியும், பல்கலைக்கழக நல்கை ஆணையத்தால் உயர்திறன் மையம் என்ற தகுதியும் பெற்றது'

**டிப்ளோமா கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

1. Diploma Course in Management
2. Diploma Course in Accounting & Auditing
3. Diploma Course in School Management
4. Post Graduate Diploma in Public Relation

**Eligibility : Undergraduate Degree**

Duration : 1 year

**Admission Closing Date 5-12-2005**

தகவல் மற்றும் நேரடி அனுமதி சேர்க்கை மையம்

**ASIAN BUSINESS COLLEGE**

101, 2ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel : 021-222 8196

## நீங்காத நினைவுகளுடன் இருவருடம்

மண்ணில் 09 - 03 - 1916



விண்ணில் 03 - 11 - 2003

### அமரர் பகவதி திசவீரசிங்கம்

*திதி: 11-11-2005*

உள்ளத் தாமரையில் என்றும் மலர்ந்திருந்தும்
உங்கள் நினைவுகளில் உயிர்வாழும் நாங்கள்
ஆண்டு இரண்டு கண்ணீருடன் கடந்தது அம்மா!
ஆறாத துன்பத்தில் தவிக்கின்றோம் நாம்!

**துன்னாலை கிழக்கு,**
**கரவெட்டி.** *(42635)(26-11-17)* **குடும்பத்தினர்.**

### சாரதி தேவை

*பாரவூர்தி வாகனம் செலுத்தக் கூடிய, 10 வருடம் அனுபவம் உள்ள, சாரதி உடன் தேவை. தகுதிக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.*

தொடர்பு:
சிவா நறுமணப் பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.222 2567

*(சி/46173) (26-11-17)*

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

### பதவி வெற்றிடம் லொறிச் சாரதி (தற்காலிகம்) சம்பள குறியீட்டு இல. 312/13

மேற்படி சங்கத்தில் தற்காலிகமாக பணிபுரிவதற்கு லொறிச் சாரதிகள் தேவை. உள்வாரியாகவும் வெளிவாரியாகவும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க விரும்புவோர் 24-11-2005 ஆம் திகதிக்கு முன்பு காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து 'பொதுமுகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை' என்ற விலாசத்துக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகைமைகள்:**

1. 8 ஆம் வகுப்பு சித்தி
2. 18-45 இடைப்பட்ட வயதுடையோர்
3. பார ஊர்தி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்
4. சம்பள அளவுத்திட்டம் :- 4000 - 5550 / 75x 10- 80 x10
5. நாள் சம்பள அடிப்படையில் வேதனம் வழங்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
சங்கானை.ப.நோ.கூ.சங்கம்.

*(சி/46167)(26-11-17)*

# ஜோர்தான் ஹோட்டல்களில் தற்கொலைத் தாக்குதல்கள்!

## 70 பேர் உயிரிழப்பு; 300 பேர் காயம்

அம்மான், நவ:11

ஜோர்தான் தலைநகர் அம்மானிலுள்ள மூன்று ஹோட்டல்களில் நடந்த தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் குறைந்தது 70 பேர் உயிரிழந்தனர். மேலும் 300 பேர் வரை காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல்களுக்கு அல்கெய்டா அமைப்பு உரிமை கோரியுள்ளது.

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடான ஜோர்தானின் தலைநகர் அம்மானில் உள்ள நட்சத்திர ஹோட்டல்கள் மூன்றின்மீது இந்தத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

கிரான்ட் கைட், ரடிசன், கியாஸ் ஆகிய ஹோட்டல்களிலேயே இந்தக் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இரண்டு ஹோட்டல்களில் தற்கொலைக் குண்டுதாரிகள் தமது உடலில் சுமந்துவந்த குண்டுகளை வெடிக்கவைத்தனர். மூன்றாவது ஹோட்டலில் காரில் வந்த தற்கொலைக்குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்தார்.



ரடிசன் என்ற ஹோட்டலிலேயே மிகப்பெரிய குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. அங்கு திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கானோர் கூடியிருந்தனர். இந்தத் தாக்குதலில் திருமண நிகழ்வுக்கு வருகைதந்திருந்த பலர் உயிரிழந்தனர்.

இந்தக் குண்டுத்தாக்குதலையடுத்து அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன். ஜோர்தானின் எல்லைப்பகுதிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஜோர்தான் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.


முக்கியமான தூதரகங்கள், மற்றும் ஹோட்டல்கள் என்வற்றைச் சுற்றிப்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு நேற்று விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதலையடுத்து ஜோர்தான் மன்னர் கஜகஸ்தானில் மேற்கொண்டிருந்த பயணத்தை இடையில் முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

ஜோர்தான் விஜயம் மேற்கொள்ளவிருந்த ஐ.நா. செயலாளர் கோபி அனான் தனது விஜயத்தை ஒத்திவைத்துள்ளார். (க)

# வெள்ளிக்கோளை ஆராய்வதற்கு 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' ஏவப்பட்டது

மொஸ்கோ, நவ.11



வெள்ளிக்கோளை ஆராய்வதற்கு 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' விண்கலம் கஜகஸ்தான் நாட்டில் உள்ள ஏவுதளத்தில் இருந்து நேற்றுமுன்தினம் ஏவப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சார்பில் வெள்ளிக்கோளுக்கு 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' என்ற விண்கலம் ரஷ்யாவின் சோயூஸ் ரொக்கெட் மூலமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.

விண்ணில் செலுத்தப்பட்டு 90 நிமிட பயணத்துக்குப் பின்னர் ரொக்கெட்டில் இருந்து பிரிந்த 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' விண்கலம் வெள்ளிக்கோளை நோக்கித் தனது பயணத்தை வெற்றிகரமாகத் தொடங்கியது.

அந்த விண்கலம் அனுப்பிய முதல் சமிக்ஞை பூமியிலுள்ள கட்டுப்பாட்டு நிலையத்தை அடைந்துள்ளது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

வெள்ளிக்கோளை ஆராய்வதற்கான விண்கலம் ஒன்றை அனுப்புவது குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கடந்த 10 ஆண்டுகளாக முயற்சி செய்து வந்தன. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை 9.33 மணியளவில் 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' விண்கலம் 'சோயூஸ்' ரொக்கெட் மூலம் ஏவப்பட்டது.

163 நாள்கள் பயணம்செய்யும் 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' அடுத்த ஏப்ரலில் வெள்ளிக்கோளின் சுற்றுவட்டப்பாதைக்குள் நுழையும்.

வெள்ளிக்கோளை இரண்டு தடவை சுற்றிவந்தவாறு பூமிக்கு தகவல்களை அனுப்பும் வெள்ளிக்கோள் பற்றிய படங்கள், புள்ளிவிவரங்களை அது பூமிக்கு அனுப்பும்.

பூமிக்கு மிக அருகில் உள்ளதுடன் அதிக வெப்பம் கூடிய கோள் வெள்ளி என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ஈராக்கில் தற்கொலைத் தாக்கு முப்பது பேர் உயிரிழந்தனர்!

ஈராக்கின் தலைநகர்பக்தாத்தில் நேற்று நடந்த தற்கொலைத் தாக்குதலில் 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் 20 பேர் காயமடைந்தனர்.

பக்தாத்தின் நகர மத்தியிலுள்ள உணவகம் ஒன்றில் இந்தத் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இடம் பெற்றது. ஷியா முஸ்லிம்கள் அதிகமாக வாழும் இந்தப் பகுதியிலேயே இந்தத் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நேரில் பார்த்தவர்களின் தகவலின்படி தற்கொலைக் கார்க்குண்டுத் தாக்குதல்களே இவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் ஈராக்கின் பகூபா நகரில் நடந்த தற்கொலைத் தாக்குதலில் ஏழு ஈராக் பொலீஸார் உயிரிழந்தனர். மேலும் 9 பேர் காயமடைந்தனர்.

இந்தத் தொடர் தாக்குதல்களையடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (க)

# நட்வர்சிங் அமைச்சர் பதவியிலிருந்து விலகும் பேச்சுக்கே இடமில்லையாம்

## இந்தியப் பிரதமர் தெரிவிப்பு

புதுடெல்லி,நவ.11

ஈராக்கில் எண்ணெய்க்கு பதில் உணவுத்திட்ட ஊழல் விவகாரத்தில் சிக்கியுள்ள இந்திய வெளிவிவகார முன்னாள் அமைச்சர் நட்வர் சிங் மத்திய அமைச்சர் பதவியிலிருந்து விலகும் பேச்சுக்கே இடமில்லை என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

ஈராக்கிய எண்ணெய்க்கு உணவுத்திட்ட ஊழலில் நட்வர் சிங்குடன் காங்கிரஸ் கட்சியும் இலாபம் அடைந்ததாக ஐ.நாவின் வோல்கர் குழு வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதையடுத்து வெளியுறவுத் துறை பொறுப்பு நட்வர் சிங்கிடமிருந்து பறிக்கப்பட்டது. தற்போது அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சராக நட்வர் சிங் இருந்துவருகிறார்.

இந்த விவகாரம் குறித்து சண்டிகாரில் ஊடகவியலாளர்களிடம் பிரதமர் மன்மோகன் சிங் பேசுகையில்,

எண்ணெய்க்கு உணவுத்திட்ட ஊழல் தொடர்பாக நட்வர்சிங் மீது வோல்கர் குழு அறிக்கை தெரிவித்துள்ள குற்றச்சாட்டு உண்மைதானா என்பதைக் கண்டறிய உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஆர். எஸ்.பாதக் தலைமையில் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

வோல்கர் குழு தெரிவித்துள்ள குற்றச்சாட்டு தொடர்பான ஆவணங்களை ஐ.நா. சபையிலிருந்தும், இதர நாடுகளிலிருந்தும் பெறுவதற்காக வெளியுறவுத் துறை முன்னாள் உயர் அதிகாரி வீரேந்திர தயாள் தலைமையில் மற்றொரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு குழுக்களின் விசாரணை முடிந்த பிறகே நட்வர் சிங் மீதான அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவுசெய்யப்படும். அது வரை அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சராக நட்வர் சிங் நீடிப்பார். மத்திய அமைச்சரவையிலிருந்து அவர் விலகும் பேச்சுக்கே இடமில்லை.

விசாரணைக் குழுக்கள் மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து விரைவில் விரிவான அறிவிப்பு வெளியிடப்படும். நேர்மையான முறையில் இக்குழுக்கள் தங்களது விசாரணைகளை நடத்தி முடிக்கும். விசாரணை முடியும் வரை இந்த விவகாரம் குறித்து நான் கருத்துத் தெரிவிக்கமுடியாது.

நட்வர் சிங் மீது வோல்கர் குழு தெரிவித்துள்ள ஊழல் புகார் விவகாரத்தில் நடவடிக்கை எடுக்க மத்திய அரசு காலதாமதம் செய்துவிட்டது என்ற குற்றச்சாட்டை ஏற்க முடியாது. விரைவாக செயல்பட்டு உண்மையைக் கண்டறிய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றார் பிரதமர் மன்மோகன் சிங். (க)

உலக அரங்கில்

# வடகொரிய அணுத்திட்டம் குறித்த ஐந்தாம் கட்டப் பேச்சுகள் ஆரம்பம்

வடகொரியாவின் அணுவாயுதப் பிரச்சினை குறித்த பேச்சுகள் நேற்றுமுன்தினம் பீஜிங்கில் ஆரம்பமாகியுள்ளன.

வடகொரியாவை அணுஆயுதமற்ற நாடாக மாற்றுவதற்கான பேச்சுகள் பல கட்டங்களாக இடம்பெற்று வருகின்றன. இதுதொடர்பான பேச்சுகள் நடத்துவதற்கு 6 நாடுகளுக்கு சீனா அழைப்பு விடுத்திருந்தது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்கா, தென்கொரியா, வடகொரியா, சீனா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் அடங்கிய குழு முதல் கட்ட பேச்சுகளை 2003ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் சீனத்தலைநகர் பீஜிங்கில் நடத்தின.

இதன் பின்னர் இந்த ஆறு நாடுகள் அடங்கிய குழு இதுவரை மூன்று சுற்றுப் பேச்சுகளை நடத்தியுள்ளது.

இதைத்தொடர்ந்து, நேற்றுமுன்தினம் சீனத்தலைவர் பீஜிங்கில் இந்த ஆறு நாடுகள் அடங்கிய குழுவின் 5ஆவது கட்டபேச்சுதொடங்கியுள்ளது.

தொடர்ந்து 3 நாள்கள் நடைபெறவிருக்கும் இந்தப் பேச்சுகளின் ஆரம்ப நிகழ்ச்சியில் சீனாவின்தலைமைப் பேச்சாளரும்,இணை வெளியுறவுத்துறை அமைச்சருமான வு-தாவேய் கலந்துகொண்டு அங்கு அவர் பேசுகையில்,

அணுவாயுதமற்ற ஒரு சுதந்திரமான வடகொரிய தீபகற்பத்தை உருவாக்குவது தொடர்பாக பொறுப்பான, சுமூகமான, பலன்தரக்கூடிய ஒரு சூழ்நிலையை இந்த ஆறு நாடுகளும் உறுதிசெய்து தருவதற்காக இந்த 5ஆவது கட்டப் பேச்சைத் தொடங்கியிருக்கிறோம் என அவர் தெரிவித்தார். அதேசமயம் அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சுமூகமான,பலன் அளிக்ககூடிய முடிவுகளை எடுப்பதற்கான இந்தத் தொடர்பேச்சுகளில், சம்பந்தப்பட்ட 6 நாடுகளும் தொடர்ந்து பங்குகொள்ளும் என்று தான் நம்புவதாகவும் சீனாவின் இணைய வெளியுறவுத் துறை அமைச்சர் வு-தாவேய் தெரிவித்துள்ளார்.

# புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரிட்டன் நாடாளுமன்றில் விவாதம்

பிரிட்டன் தீவிரவாதிகளுக்கெதிரான கடுமையான புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

இதுதொடர்பான விவாதம் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் தொடங்கியுள்ளது.

இந்தச் சட்டத்தில், தீவிரவாதச் செயல்களில் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோருக்கு எதிராக குற்றச்சாட்டுகளைப் பதிவுசெய்யாமலே அவர்களை 90 நாள்கள் வரை தடுத்துவைத்து விசாரிக்கமுடியும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.






# பெல்ஜியத்துக்கும் பரவியது வன்முறை

## பிரான்ஸில் அவசரநிலை பிரகடனம்

பாகிஸ்தான், நவ.11

பிரான்ஸ் நாட்டில் தொடரும் வன்முறைகள் பெல்ஜியத்துக்கும் பரவியுள்ளன. பிரான்ஸின் பாரிஸ் நகரிலும், அதனைச்சுற்றிய நகரங்களிலும் கடந்த 14 நாள்களாக வன்முறைகள் தொடர்ந்து வருகின்றன. இதனையடுத்து பிரான்ஸில் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, பெல்ஜியத்தின் துறைமுக நகரான ஒன்ட்டு வர்ப்பில் கடந்த மூன்று நாள்களாக வன்முறைக்குழுக்கள் நடத்திய கலவரத்தில் பெருமளவு வாகனங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு வாரங்களாக பாரிஸ் நகரிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் தொடரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த பிரான்ஸ் அரசு அவசரநிலைப் பிரகடனத்தை நேற்றுமுன்தினம் முதல் அமுல்படுத்தியுள்ளது. இது 12 நாள்களுக்கு அமுலில் இருக்கும்.

வன்முறைகளை அடக்கும் அவசரநிலைப் பிரகடனச் சட்டம் 50 ஆண்டுகளுக்கு பின்பு தற்போது அங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அவசரநிலை பிரகடனத்தின் பின்னர் வன்முறைக்குழுக்கள் நகரின் இரண்டு பெரிய வர்த்தக அங்காடிகளைச் சூறையாடினர். தென்கிழக்கு ஆல்ப்ஸ் மேரிடைம்ஸ் பகுதியிலுள்ள பத்திரிகை அலுவலகத்தை தீயிட்டுக் கொளுத்தினர். பிரான்ஸ் நாட்டின் இரண்டாவது பெரிய சுரங்க நடைபாதையையும் குண்டு வைத்துத் தகர்த்தனர்.

இதையடுத்து அதிகாரிகள் லைன்ஸ் நகரின் தெற்கு பகுதியிலுள்ள சுரங்க ரயில் பாதையை மூட வேண்டும் என அரசிடம் வலியுறுத்தியுள்ளனர்.

கடும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அங்கு மேற்கொண்டுள்ளன.

வன்முறைகளில் ஈடுபடுபவர்களைக் கைது செய்து உடனடியாக அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்ப பிரான்ஸ் அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

பிரான்ஸ் நாட்டைப் போலவே, பெல்ஜியத்திலும் அதிகளவில் குடியேறி வசித்துவரும் ஆபிரிக்க மக்கள் வேலையில்லாப் பிரச்சினை உட்பட பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

பாரிஸ் வன்முறைகளைத் தொடர்ந்து இவர்களும் கடந்த சில நாள்களாக வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அங்கு பல கார்கள், பஸ்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

பாரிஸில் இளைஞர்கள் மேற்கொள்ளும் கலவரத்தை அடுத்தே பெல்ஜியத்திலும் கலவரம் ஏற்பட்டுள்ளது என பெல்ஜியப் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

# பதவி வெற்றிடம்

**சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ.து)**

1. பதவி: **பொது முகாமையாளர்**
   பதவி குறியீடு: - 101/3
   சம்பளத் திட்டம்: 5250 - 7750 (31/99 சுற்று நிருபப்படி)
   120 x 10 - 130 x 10
   வயது: 18-45 வரை
   பால்: ஆண்/பெண்

**கல்வித்தகைமை:**

அ) கூட்டுறவு பணியாளர் 09 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம்/10ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்தவண்ணம் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டத்துடன் அல்லது இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உ/த) சித்தி/ க.பொ.த (உ/த) 03 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்

2. பதவி: **கணக்காளர்**
   பதவி குறியீடு: - 104/10
   சம்பளத் திட்டம்: 4750 -6850 (31/99 சுற்று நிருபப்படி)
   100 x 10 - 110 x 10
   வயது: 18 -45 வரை
   பால்: ஆண்/பெண்

**கல்வித்தகைமை:**

அ) கூட்டுறவுப் பணியாளர் 11 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதவியில்/கணக்கியல் அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம்/ கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத் திட்டத்தில் மேற்கூறப்பட்ட தகைமையுடன் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியியல் இறுதிச் சான்றுகளுடன் கணக்கியல்/கணக்காய்வு தொடர்பான 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்/ ஐக்கிய ராச்சிய கணக்குப் பதிவியல் சான்றிதழுடன் மேற்கூறப்பட்ட தகைமையுடன் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

இ) கூட்டுறவுப்பணியாளர் தராதரப் பத்திரம் (உ/தரம்) சித்தி/ க.பொ.த (உ/த) கணக்கியல் உட்பட 03 பாடங்கள் சித்தியுடன் கணக்கியல்/கணக்காய்வு துறையில் வர்த்தக/ தொழில் ஸ்தாபனமொன்றில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்

**குறிப்பு:**

01. மேற்குறித்த இரு பதவிகளுக்கும் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுசுற்றுநிருபங்களுக் கமைவாக 1250.00, 2500.00 சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும்.
02. மேற்குறித்த இரு பதவிகளினதும் வயதெல்லையில் கூட்டுறவுச் சங்க பணியாளருக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி 30-11-2005**

விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி: திரு.சி. பாலையா (தலைவர்)**
**சுன்னாகம் பனை தென்.வள.அபி கூ.சங்கம்**
**மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.**

தலைவர்,
பனை தென்னை வள.அ.கூ.சங்கம் சுன்னாகம். (சி-46174)(21.11)

# மரண அறிவித்தல்

## திருமதி பூரணம் சுப்பிரமணியம்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் ரெயில் றோட், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் சுப்பிரமணியம் 10.11.2005 அன்று காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.11.2005 அன்று கொக்குவிலில் நடை பெற்றது.

தி.பாலகும்மார்
ரெயில் றோட்,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
**பேரப்பிள்ளைகள்.**

(42649)(21.19.14)

# தேர்தல் கண்காணிப்பு குழுத் தலைவர் இன்று யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்,நவ.11

குடாநாட்டில் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புப் பணிகளை மேற்பார்வையிட ஐரோப்பிய ஒன்றயத்தின் தேர்தல் அவதானிப்புக் குழுவின் தலைவர் ஜோன் குஷ்னகன் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

அவர் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் தேர்தல் பணிகளை நேரில் பார்வையிடுவதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார். இன்று பிற்பகல் செய்தியாளர்களையும் அவர் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை - ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் இருவர் குடாநாட்டில் தேர் தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தேர்தல் முடியும் வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவர். (ஒ-202)

# வாக்காளர் அட்டை பெறாதோருக்கு

யாழ்ப்பாணம்,நவ.11

வாக்காளர் அட்டை விநியோகம் கடந்த புதன்கிழமையுடன் முடிவடைந்துள்ளது என்றும் -

இதுவரை வாக்காளர் அட்டைகளைப் பெறாதவர்கள் தத்தமது பகுதித் தபால் அலுவலகங்களுக்கு நேரடியாகச் சென்று தம்மை அடையாளம் காட்டி வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் -

வடபகுதி பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் கேட்டுள்ளார்.

தபால் ஊழியர்களால் வாக்காளர் அட்டைகள் கடந்த புதன்கிழமை வரை வீடு வீடாக விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-202)

# வழிகாட்டல் வகுப்பு

ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தில் இயங்கும் சித்திரப் பயிற்சி நிறுவனத்தில் சித்திரமும் வடிவமைப்புமாணிப் பட்டப் படிப்பிற்கான நுழைவுத் தேர்விற்குரிய இலவச வழிகாட்டல் வகுப்பு நடைபெற்று வருகின்றது.

இக்கற்கை நெறியை மேற்கொள்ள விரும்புவோர் மேற்படி நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-203)

# வலிகாமம் வலய பாவோதல் போட்டி முடிவுகள்

வலி.தெற்கு,நவ.11

நவராத்திரி தினத்தையொட்டி வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சகலகலாவல்லிமாலை விருத்தப்பா ஓதல் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் அண்மையில் வழங்கப்பட்டன. வெற்றியீட்டிய மாணவர் விவரம் வருமாறு:-

பிரிவு I

ஆண்கள் - க.கார்த்திகேயன் (சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலயம்), ப.சாயிராம் (இணுவில் இந்துக் கல்லூரி), ச.சஜீதன் (மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயம்).

பெண்கள் - வி.கங்கா (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி), ஆ.தயானி (சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), இ.இந்துஜா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி).

பிரிவு II

ஆண்கள் - சு.சரணன் (சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி), பா.சிவாகரன் (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), உ.விஜயகாந்தன் (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி).

பெண்கள் - சி.வாசுகி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), ஜெ.வைஷ்ணவி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), ச.நிலானி (சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி). (ஒ-152)

# தேவை

தொலைத்தொடர்பு நிலையத்திற்கு பெண் தொலைபேசி இயக்குநர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். பழக விரும்புவோரும் தேவை.

தொடர்பு:
**நாதன் தொலைத்தொடர்பு நிலையம்,**
*பிரதான வீதி,*
*பருத்தித்துறை.*

(சி/46172) (21.19.14.32)

# Tender Notice

DEZA DDC DSC SDC COSUDE

The Second Paragraph of the above advertisement appearing on 10-11-2005 should be read as follows: Interested Bidders having ICTAD grade M5 and M6 shall collect their bids.

SRI LANKA RED CROSS SOCIETY

# SRI LANKA RED CROSS SOCIETY JAFFNA DISTRICT

in conjunction with the Australian Red Cross

## VACANCY FOR YOUTH/ VOLUNTEER MANAGEMENT OFFICER

We are seeking for a motivated person with qualifications and demonstrated experience in the area of volunteer management to work with the Organisational Development Delegate of the Australian Red and the Branch Executive Officer of the Sri Lanka Red Cross, Jaffna Branch. The successful candidate will set up volunteer management system and regularly travel to Red Cross District Sub Branches and units to assist them in volunteer management.

**Duties applicable**

I. Work towards the achievement of Sri Lanka Red Cross (SLRCS) and Australian Red Cross (ARC) goals through effective relations and teamwork
2. Ensure understanding of roles, responsibilities lateral relationships and accountabilities
3. Perform other work related duties and responsibilities as may be assigned by the Supervisor.

**Specific responsibilities and accountabilities**

1. Implement activities including trainings and networking in youth and volunteer component of Organisational Development plan and in according to the policies and procedures of volunteer management (VM).
2. Develop and implement a VM system at the Branch, District Sub- Branch and unit level.
3. Recruit youth volunteers, advisors, and set up the committee.
4. Develop and volunteer database at the branch.
5. Prepare and circulate report on volunteer activities to relevant bodies.
6. Be responsible for assuring sub branches and units regularly update their database and send to branch to forward to NHQ
7. Set up system to recruit, train, retain and recognise volunteers.
8. Set up specialised volunteer service (SVS) system.
9. Monitor and evaluate implementation of VM policy implementing at the Branch level
10. Ensure appropriate, consistent and fair treatment of all volunteers.
11. Develop, implement and maintain a SLRCS volunteers identification system.
12. Supervise and monitor activities of the volunteers.
13. Conduct quarterly review meetings with volunteers at sub branches
14. Actively participate in meetings with the VM coordinator at the NHQ

**Qualifications:**

- Degree or Diploma in Social Work or equivalent community focussed education.
- Minimum 5 years experience with working with similar work.
- Excellent English both spoken and written
- Experience as Red Cross volunteer is an asset.
- Very competitive salary will be offered to the successful applicant.

Applications should be sent under registered mail before 26th November 2005 to:

**Branch Executive Officer**
SriLanka Red Cross Society,
Jaffna Branch,
No.73, Kandy Road, Jaffna.

(C/46177)

மகிழ்வுடன் இருப்பதே அனைவரினதும் அவா. அந்த ஆசை பூர்த்தியாகாமல் இருப்பது நாம் விட்ட தவறுகளால் தான். ஜனாதிபதிப் பதவிக்கு கந்தக நிலத்தில் வெற்றுக் கால்களால் நடந்து சென்று முன்னேறிய தைரியமான மனிதரைத் தெரிந்தெடுங்கள். பொருளாதாரம் சமமாகப் பகிரப்பட்டால் நாம் அனைவருமே செல்வந்தர்தான்.

நாம் சமாதானத்தை பரப்புவோம் விக்டர் ஹெட்டிகொட சின்னம் கோப்பை S.V.H.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### சின்னக்குட்டி சண்முகராசா

தோற்றம் 01.12.1936 மறைவு 14.11.2002

11.11.2005

தன்னுயிர் போல் எமைக்காத்து
வையத்தில் நற்பிள்ளைகளாய்
விளங்க வைத்தீர்
ஆண்டு மூன்று கழிந்தாலும்
திருமேனி அழிந்தாலும்
எங்கள் அப்பா! உங்கள் பெயர்
நிலைத்திடவே வையத்தில் நாம் வாழ்வோம்.

முகவரி:
இளவாலை வேரவல்,
இளவாலை.
(42669) (54-34-13)

உங்கள் நினைவுடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### செல்வி நிரோசனா சிறிதாஸ்

*மலர்வு: 24.12.1988* *உதிர்வு: 28.09.2005*

கடந்த 28.09.2005 அன்று அகால மரணமடைந்த செல்வி நிரோசனா சிறிதாஸ் அவர்களின் 45 ஆம் நாள் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (11.11.2005) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(42645) (54-34-13)

*நிரந்திர முகவரி: மாம்பிராய் வீதி, காங்கேசன்துறை.*

*தற்காலிக முகவரி: பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் ஆசிரியர்
**அ.யோகேஸ்வரன்** அவர்களின்
அன்புத் தாயார்
### அண்ணாமலை பொன்னு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலயம்,*
*தாளையடி.* (சி-46181) (25) *பாடசாலைச் சமூகம்.*

## உடன் தேவை

மது கல்வி நிறுவனத்திற்கு கணனி (Typing) தெரிந்த பெண் பிள்ளை தேவை. டச்சு வீதி, கோப்பாய் தெற்கில் அமைந்துள்ள எமது நிறுவனத்துடன் பிற்பகல் 3-6 மணிக்கிடையில் தொடர்புகொள்ளவும். அல்லது T. P.: 077 9122918

(42664) (25)

## கண்ணீர் அஞ்சலி

*எமது கல்லூரியின் ஸ்தாபகராகிய அருணாசல உடையாரின் பேரனும்*
*முன்னாள் முகாமையாளரும் முன்னாள் அதிபருமாகிய*
*காலஞ்சென்ற சு.சிவசுப்பிரமணியம் அவர்களின் பாரியாரும்*
*எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியையுமாகிய*
### திருமதி பத்மாவதி சிவசுப்பிரமணியம்

அவர்களின் மரணச்செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(42662)(54-34-13)

ஆசிரியர் கழகம்,
யா/ அருணோதயக் கல்லூரி, அளவெட்டி.

## மணவறை விற்பனைக்கு

புதிதாகச் செய்யப்பட்ட மணவறை விற்பனைக்குண்டு (ஓடருக்கும் செய்து தரப்படும்)

*தொடர்பு:*
வ.ஞானசம்பந்தன்
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
(கருணாகரப் பிள்ளையார் கோயிலடி - முன்று கோயிலடி)

(42663) (54-34-13)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஸ்தாபகராகிய அருணாசல உடையாரின் பேரனும் முன்னாள் முகாமையாளரும் முன்னாள் அதிபருமாகிய காலஞ்சென்ற சு.சிவசுப்பிரமணியம் அவர்களின் பாரியார்
### திருமதி பத்மாவதி சிவசுப்பிரமணியம்

(முன்னாள் ஆசிரியை, யா/அருணோதயக் கல்லூரி)

அவர்களின் மரணச்செய்தி அறிந்து பாடசாலைச் சமூகம் கவலைக்குள்ளாகியது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

(42661) (54-34-13)

அதிபர், பாடசாலைச் சமூகம்,
யா/ அருணோதயக் கல்லூரி.

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி முருகேசு இராசம்மா

(ஓய்வுபெற்ற பெண்கள் கேணிப் பாதுகாவலர் - கீரிமலை)

தோற்றம் 25.05.1925 மறைவு 24.11.1997

திதி: 11.11.2005

*என்றென்றும் உங்கள் நீங்காத நினைவலைகளுடன்...*

(சி-46180) (25-54-34-13)

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

## கோப்பாய் விபத்தில் இளைஞர் படுகாயம்

கோப்பாய் பாலத்தடியில் நேற்று பி.ப. 3.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இனுவில் மேற்கைச் சேர்ந்த பாக்கியநாதன் நிரோசன் (வயது 17) என்பவர் படுகாயமடைந்தார்

காயமடைந்தவர் உடனடியாக கோப்பாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். .(எ-12)

## சக்சஸ் மல்ரி ஹவுஸ் S.M.H

**4ஆவது சீட்டிழுப்பு முடிவு**

பெயர் :ந.விசாகன் இல:274
முகவரி:மீசாலை வடக்கு, கொடிகாமம்.
புத்தூர் சந்தி,
மீசாலை.
(சி-46182)(54-34-13)

S.M.H
உரிமையாளர்.










## யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம் - தரம் ஐந்து புலமைப் பரிசில் தேர்வு
## பாராட்டி வாழ்த்துக்கள்



**கோ.சங்கீதா** 134 புள்ளி



**உ.உஷாந்தன்** 132 புள்ளி



**அ.டர்சன்** 125 புள்ளி

மேற்படி தேர்வில் சித்திபெற பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர் செல்வி செ.உதயகலா (கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்), திருமதி உ. செல்வரத்தினம் ஏனைய ஆசிரியர்களைப் பாராட்டுவதுடன் சுற்றலில் மேலும் உதவிய யா/குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் அவர்களையும் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்த்தும்:
திரு.திருமதி கோபாலசுந்தரம்,
திரு.திருமதி உதயகுமார், திரு.திருமதி அமிர்தலிங்கம்.

ஏழாலை.
(42671) (54-34-13)

## மரண அறிவித்தல்கள்

### வைரவநாதன் புவனேந்திரன்



ஏழாலை தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவநாதன் புவனேந்திரன் அவர்கள் நேற்று (10.11.2005) வியாழக்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவநாதன் (முன்னாள் அதிபர், யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்) சுந்தரம் ஆகியோரின் அன்பு மகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் ஞானசுந்தரி, ஞானசுந்தர் (லண்டன்), சுகுணசுந்தரி, வேரகன், திருப்பரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் றஜி, சம்ளி, கோமகள் (கனடா), ஆகியோரின் மாமனாரும் சியோனின் பேரனாரும் மற்றும் லோகநாயகி (உபஅதிபர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற கலாவதி, செல்வநாயகி, யோகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இரகுபதி (உரிமையாளர், துவாரகாஸ் கொழும்பு-சுன்னாகம்), மகேந்திரன் (நில அளவையாளர்-சவூதி), பாக்கியநாதன், பிரியதர்ஷினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.11.2005) சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை தெற்கு,*
*சுன்னாகம்.*
(42671) (54-34-13)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தம்பையா கண்மணி



அம்மன் கோயிலடி, தையிட்டியை பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு, மாவடி ஒழுங்கையை (எச்சாட்டி வைரவர் வீதி) வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கண்மணி அவர்கள் நேற்று (10.11.2005) வியாழக்கிழமை காலமானார். அன்னார் தம்பையாவின் (மீசை அண்ணன்) மனைவியும் காலஞ்சென்ற செல்லையா-அன்னச்சிப்பிள்ளை தம்பதியரின் இரண்டாவது மகளும் பாக்கியம், செல்வராசா, சிவமணி, காலஞ்சென்ற ராசமணி, செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரியும் மேனகா (ஜேர்மனி), சிவகுமார், சிவராம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் நேசராசா (ஜேர்மனி), கவிதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கல்பனா, நிதர்சன், நிலுயா, நிருசா, நிதாசனா, மதுசன் ஆகியோரின் பேர்த்தியாரும் தாரணி, நேசகுமார் (மதுவரித் திணைக்களம்), அகியோரின் சிறியதாயாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2005) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாவடி ஒழுங்கை,*
*சுதுமலை தெற்கு,*
(42672) (54-34-13)

தகவல்:
க. தம்பையா (மீசை),
பிள்ளைகள்: மேனகா, சிவகுமார், சிவா.

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்



### தெய்வேந்திரம் விஜயரூபன்
### (மேஜர் கமலன்)

மண்ணில் 17-10-1974 விண்ணில் 11-11-1999

*தமிழ்மண் காத்திட தன்னுயிர் ஈர்ந்த*
*காலத்தால் அழியாத காவிய நாயகா கமலா!*
*தலைவன்காட்டிய வழியில் சென்று தடைகளைத்*
*தகர்த்து சமரினை வென்றாய்!*
*மண்ணும் விண்ணும் அழியும் மட்டும் மனதில்*
*உன்நினைவுகள் அழியா மலரும்தாயக மண்ணில்*
*உன்பாத சுவடுகளை பதிக்க மீண்டும் நீ வருவாய் கமலா!*

உன் நினைவில்
*தென்மராட்சி.* (42670) (54-34-13) - நண்பன் -

## மு.கா. தேர்தல் அலுவலகம் மீது சம்மாந்துறையில் தாக்குதல்

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரம சிங்கவை ஆதரிப்பது தொடர்பான வேலைகளை ஒருங்கிணைப்பதற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்ஸால் சம்மாந்துறை - அம்பாறை வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டதோடு அங்கிருந்த மு.காவின் ஆதரவாளர்களும் தாக்கப்பட்டுள்ளனர். இதில் படுகாயம் அடைந்துள்ள இரு ஆதரவாளர்கள் சம்மாந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அரசுத்தரப்பின் முக்கிய முஸ்லிம் பிரமுகர் ஒருவர் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சகிதம் இந்த அலுவல கத்திற்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினார் என்று கூறப்படுகிறது. சம்பவத்தின்போது அலுவலகத்திலிருந்து தப்பியோடியவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர். (எ-7)

## அரச ஊடகங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறார் எனத் தெரியவருகிறது.

தேர்தலுக்கான திகதி நெருங்கிவரும் நிலையில் அரச ஊடகங்கள் பக்கச்சார்பாக செயற்பட்டுவருவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்குப் பல தடவை கொண்டு வந்திருந்தது.

அதேபோல் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒருவார காலம் இருக்கும்போது அரச ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்காக தகுதி வாய்ந்த அதிகாரியொருவரை நியமிக்குமாறும் ஐ.தே.க. கோரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில் எதிர்வரும் வாரத்தின் முற்பகுதியில் அரச ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்காக தகுதிவாய்ந்த அதிகாரியொருவரை நியமிக்க தேர்தல் ஆணையாளர் தீர்மானித்திருக்கிறார் எனவும் -

இதற்காக உயரதிகாரியொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் எனவும் - தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் நேற்றுமாலை தெரிவித்தன. (எ-க)

## நீதிமன்றத் தீர்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கிலோ மீற்றர் தொலைவில் இது தொடர்பான கொத்தணி வாக்காளிப்பு நிலையங்களை அமைக்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது தெரிந்ததே.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்கள், கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து வாக்களிப்பதற்கான ஏதுநிலை சாத்தியப்பாடுகள் குறித்து விரிவாக ஆராய்ந்து, அது குறித்து அறிக்கையொன்றை அனுப்புமாறும் தேர்தல் ஆணையாளர் நேற்று வடக்கு - கிழக்கைச் சேர்ந்த அரச அதிபர்களையும் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களையும் கேட்டுள்ளார்.

தேர்தல் கால மோசடி, இதர வன்முறைகள் தொடர்பிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் விடயத்திலும் தேர்தல் சட்ட திட்டங்களுக்கு இசைவாகச் செயற்படுமாறும் நேற்றைய கூட்டத்தில் தேர்தல் ஆணையாளர் அறிவுறுத்தியிருக்கிறார் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

## எலும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருக்குலைந்த நிலையில் காணப்பட்ட எலும்புக்கூட்டு எச்சங்களை யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்று பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவு பிறப்பித்தார். (எ-45)

## மாவட்டத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கும் இந்த மாநாட்டில், தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் -

மாணவர்களின் உரிமைகளை அங்கிகரிக்க வேண்டியதன் தேவைகள் குறித்து விரிவாக ஆராயப்படும்.

பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சுமார் ஆயிரத்து 500 மாணவர்களும் இதில் கலந்துகொள்வர்.

எழுச்சி மாநாட்டை முன்னிட்டு யாழ். பல்கலைக் கழகத்தில் அலங்கார விளைவுகள் அமைக்கப்பட்டு பல்கலைக்கழகச் சூழல் எழுச்சிப் கோலம் பூண்டுள்ளது. (எ-7)

## கத்திக்குத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார் என்றும் - ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கூறின.

சம்பந்தப்பட்ட நபருக்கு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்பட்டது. இதனையடுத்து ஆஸ்பத்திரியில் இருந்து வெளியே தப்பிச்செல்வதற்காக யாழ். ஆஸ்பத்திரியின் பின்புறமாகச் சென்ற இவர் திடீரென மதிலேறி நகரில் நிலைகொண்டுள்ள 512 ஆவது படைமுகாமிற்குள் பாய்ந்துள்ளார்.

இதனையடுத்து, யாழ். ஆஸ்பத்திரிப் பணியாளர்கள் இதுவிடயமாக படை முகாமிற்கும் பொலீஸாருக்கும் தெரியப்படுத்தியதையடுத்து குறிப்பிட்ட நபரை படையினர் பிடித்து வந்து யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். (எ-7)

## கருணாவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் நவீன் திஸநாயக்க கினிகத்தேனையில் - அதுவும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்திலேயே - இந்த உண்மையை வெளிப்படுத்தியுள்ளார். மற்றும் ஒரு முன்னாள் அமைச்சரான மிலிந்த மொறகொடவும் 'டெயிலி மிரர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அதனை ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்.

இவர்களுடைய கருத்துகள்தான் புலிகள் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதற்கான முக்கிய காரணமாகிவிட்டது. தமிழ் மக்களின் வாக்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைக்காது. வடக்கு- கிழக்குத் தமிழர்கள் ஒரு போதும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்க மாட்டார்கள். மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. - என்றும் அமைச்சர் மங்கள சமரவீர கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே -

நாங்கள் தனிப்பட்ட முறையில் பிரதமருக்கு தேர்தல் விளம்பரங்களை வெளியிட வேண்டிய அவசியம் இல்லை. ரணில் விக்கிரமசிங்கவும் அவருடைய சகாக்களும் பேசும் பேச்சுகளைத் தொகுத்து வெளியிட்டாலே மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்று விடுவார் - என்றுகூறினார். (எ-க-7)

## ஜனாதிபதித் தேர்தலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டைந்தது. இந்தக் கூட்டம் 3 மணித்தியாலத்துக்கும் மேலாக நடைபெற்றது. எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக் கில் வாழும் மக்கள் பின்பற்றவேண்டிய நடைமுறை பற்றி மிகவும் ஆழமாகவும் தெளிவாகவும் ஆராயப்பட்டது.

இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது முதல் மாறிமாறி வந்த சிங்கள அரசியல் தலைமைகள் எப்படித் தமிழ்மக்களை நடத்தினார்கள் என்பது பற்றியும், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எப்படிச் செயற்பட்டார்கள் என்பது பற்றியும், தமிழ் மக்கள் இராணுவ ரீதியாக எப்படியெல்லாம் ஒடுக்கப்பட்டார்கள் என்பது பற்றியும், இனப்படுகொலையை அரசுகள் எப்படியெல்லாம் நடத்தின என்பது பற்றியும் நீண்ட நேரமாகப் பேசப்பட்டன.

கடந்த மூன்றரை வருடகாலமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு சமாதானப் பேச்சுகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி அரசும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசும் எப்படியாகச் செயற்பட்டன என்பது பற்றியும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் சார்பாக தமிழ்ச்செல்வனும் தங்களது கருத்தைத் தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதித் தேர்தலால் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் விரும்புகிற ஒரு தீர்வு ஏற்பட முடியாது; ஏற்படாது. - என்பதுதான் இறுதியாக எடுக்கப்பட்ட முடிவு.

அரசியல் போராட்டம், ஆயுதப் போராட்டம், சமாதானக் காலம் ஆகியவற்றை மனதில் வைத்துத் தேர்தலை அணுகுகின்றபோது இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறை காட்டவேண்டியது இல்லை என்பது புலனாகும். இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறை காட்டுவதன் மூலமாக எதுவித நன்மையும் அடையமுடியாது என்பது எங்களது திடமான கருத்து.

தற்போது போட்டியிடும் இரு கட்சிகளினது வேட்பாளர்களும், யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு ஆட்சியில் இருந்திருக்கிறார்கள். அந்தக் காலங்களில் நடைபெற்ற நிகழ்வுகளை மனதில்கொண்டு ஆராய்ந்து சிந்திக்கின்றபோது இந்தக் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் மீது எம்மால் நம்பிக்கை வைக்க முடியாது என்ற நிலைமைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

எமது மக்களும் இந்த நிலைமைகளை அனுபவித்திருக்கிறார்கள்; அவதானித்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நிலைமைகள் எல்லாம் தெரியும்.

வடக்கு - கிழக்கில் வாழுகின்ற மக்கள் அனைவரும் நிலைமைகளை புரிந்த வர்கள். எமது மக்களும் இதே சிந்தனையில் தான் இருக்கிறார்கள். எமது மக்களும், இதேவிதமான முடிவைத்தான் எடுப்பார்கள் என்பதில் எதுவிதமான ஐயப்பாடும் இல்லை.

எமது பழைய அனுபவங்களின் அடிப்படையில் - விசேடமாக யுத்த நிறுத்தம் ஏற்பட்ட பிறகு - தமிழீழ விடுதலைப் புலிகளும் இந்தச் சமாதானப் பேச்சுகளில் ஈடுபடத் தொடங்கிய பிறகு - இடம்பெற்ற நிகழ்வுகளை நாம் ஆராய்ந்து பார்க்கிறபோது இந்தத் தேர்தலில் எமதுமக்கள் அக்கறை காட்ட வேண்டியதில்லை என்பது எமது முடிவு - என்றார் இரா. சம்பந்தன்.

''அப்படியானால் சிங்களத் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று கூறுகிறார்களா?'' - என்ற ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த இரா.சம்பந்தன், ''இந்தத் தேர்தலில் எமது மக்கள் அக்கறை காட்ட வேண்டியதில்லை என்பது எமது தெளிவான கருத்து.'' - என்றார்.

''தமிழ் மக்கள் வாக்களிக்க விரும்பினால் நீங்கள் தடுப்பீர்களா?'' - என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில், ''நிச்சயமாகத் தடுக்க மாட்டோம். தமிழ் மக்களினது ஜனநாயக உரிமையைப் பறிக்கும் நோக்கம் எமக்கு இல்லை. ஆனால், அனுபவங்களின் அடிப்படையில் நிச்சயம் இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறைகாட்டமாட்டார்கள் என்பது எமது நம்பிக்கை'' - என்றார் அவர்.

ஊடகவியலாளர்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் கூறியதாவது:-

''சிங்களத் தேசத்துக்கான தேர்தல் தொடர்பாகத் தமிழர்கள் குழம்பிக்கொள்ள வேண்டியதில்லை.

1972 மற்றும் 1978 ஆம் ஆண்டின் அரசமைப்புகளைத் தமிழர்கள் எற்றுக்கொள்ளவில்லை. அதனால், இதை எங்கள் அரசாக ஏற்கவில்லை நாம். இது எங்கள் தேசத்துக்கான தேர்தலும் அல்ல. சிங்கள தேசத்துக்கான தேர்தல்''- என்றார். (எ-க-7)

## சுரேஷ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுத்து நேற்றுக்காலை சம்பவ இடத்திற்கு கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம் தலைமையிலான பொலீஸ் குழுவினர் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடத்தப்படுவதாக கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (எ-7-180)

## மரண அறிவித்தல்

### துரையப்பா பிலேந்திரன் ஜேம்ஸ்



(முன்னாள் ஊழியர், யா/போதனா வைத்தியசாலை)

யாழ். கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிலேந்திரன் ஜேம்ஸ் அவர்கள் 07.11.2005 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிலேந்திரன்-பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் லூர்சுரஸ் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் ஜெயரட்ணம் (முன்னாள் ஊழியர், இ.போசபை), ஜெயம்மா மோசஸ், காலஞ்சென்ற டேவிட் அவர்களின் அன்புச் சகோதரனும் ஸ்கொலஸ்ரிக்கா (ஆசிரியை, யா/நவீல்ட் பாடசாலை, கைதடி), வனித்தா (இத்தாலி), சூரியா (யா/கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), அன்ரன் லூர்சினோ (Friends Musical group) அவர்களின் அன்புத் தந்தையும் கோபாலசிங்கம் (சவுதி), கிறிஸ்ரி (இத்தாலி), தர்ஷா அவர்களின் அன்பு மாமனாரும் பிரவீனா, கிசோனா, சரோண் பிரியந்தினி, பிறாயன், டவ்றீனா, அவர்களின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (12.11..2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித செபமாலை அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 11, சென். மேரிஸ், 1ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*

(42674) (30-16-34)

தகவல்: அன்ரன் லூர்சினோ (மகன்).


**1st IN com., G.A.Q.**

யாழ்., பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

PART I ஆகியவற்றிக்கு உரிய புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(42641) (30-16-34)

**மாவைபாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் பொன்விழா கல்விப்போட்டி - 2005**

மேற்படி கல்விப் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரியில்13.11.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

☞ இப்போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கு சுட்டெண்கள் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும்.

☞ முன்னர் வெளியிடப்பட்ட கல்விப் போட்டி விதிமுறைகளுக்கமைவாகவே போட்டிகள் நடைபெறும்.

| | |
|---|---|
| தமிழ்கட்டுரைப் போட்டி | 9.00 - 10.00மணிவரை |
| ஆங்கிலகட்டுரைப்போட்டி | 10.00 - 11.00மணிவரை |
| தமிழ் பேச்சுப்போட்டி | 11.15 - 12.15மணிவரை |
| ஆங்கில பேச்சுப்போட்டி | 12.15 - 1.15 மணிவரை |
| பொது அறிவுப்போட்டி | 2.00 - 3.00 மணிவரை |
| கவிதைப்போட்டி | 3.00 - 4.30 மணிவரை |

காரியாலயம் :- C.B கணனிகல்வி நிறுவனம் தலைவர். சி. செல்லத்துரை

**A/L 2007**
பொருளியல்
P. சண்
பேரினப் பொருளாதாரம்
சனி,ஞாயிறு
1.30 - 2.30 (N.T)
ஆரம்பம்: 12 .11.2005
திகர் கல்வி நிறுவனம்
K.K.S. வீதி இணுவில்.

**மாபெரும் கருத்தரங்கு**
பொருளியல்
திரு. K. உதயன்
A/L 2006 பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான
M.C.Q. (பல்தெரிவு வினா)
3 மணி நேரம்
*குறிப்பு:* 300 வெளிமாணவர்களுக்கு மட்டுமே. அனுமதிகள் இன்று தொடக்கம் பெற்றுக்கொள்ளவும்.
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
விக்னா கல்வி நிறுவனம்
(42650)

EXPOAir
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.